## முன்னுரை

புகழ்கள் அனைத்தும் எல்லாவற்றையும் படைத்து பரிபாலனம் செய்யும் அழ்ழாஹ்வுக்கே உரித்தாகட்டும்!

ஸலாதும், ஸலாமும் எங்கள் தலைவர் அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தார் மீது அவர்களது சங்கைமிகு ஸஹாபாக்கள் மீதும் உண்டாகட்டுமாக !

மார்க்கத்தில் கட்டாயமாக கற்கப்பட வேண்டிய கல்வியை தேடிக்கற்பது முஸ்லிமான ஆண், பெண் அனைவர் மீதும் பெருங் கடமையாகும். என்பதாக எங்கள் தலைவர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்.

தன்னையும், தன் குடும்பத்தையும் கொடூரமான நரக வேதனையிலிருந்து பாதுகாப்பதானது பருவமடைந்த ஒவ்வொருவரும் கட்டாயம் கற்றேயாக வேண்டிய கல்வியை கற்பதன் மூலமே சாத்தியமாகும். ஏனேனில் மார்க்க கடமைகளை சரிவர அறிந்து அதனை நிறைவேற்றாமலும், மார்க்கத்தில் தடைவிதிக்கப்பட்டவைகளை அறிந்து அவைகளை தவிர்ந்து கொள்ளாமலும் ஒருவர் தக்வாவுள்ளவராக ஆக முடியாது.

நம் மீது விதிக்கப்பட்ட கடமைகளையும், நமக்கு விலக்கப்பட்டுள்ள ஹறாம்களையும் அறிய ஓரே வழி கற்றுக் தேர்ந்த அறிஞர்களிடம் சென்று இஸ்லாமிய கல்வி ஞானம் பெறுவதேயாகும்.

இதனைக் கருத்திற்கொண்டு, ஜம்இய்யதுல் மஷாரிஉல் ஹைரிய்யஹ் அல் இஸ்லாமிய்யஹ்விலே இருக்கும் இஸ்லாமிய பாடங்கள், மற்றும் ஆய்வுகளுக்கான குழு பல நூல்களை ஆய்வு செய்த போது அவைகள் பூரணமான இஸ்லாமிய தகவல்களை கொண்டதாகவும், சரியான தகவல்களை கொண்டதாகவும் காணப்படாததால். சிறார்களின் வினைத்திறனுக் கேட்ப வாசிக்கவும், புரிந்து கொள்ளவும் இலகுவானதான நூற்களை தயாரித்தலில் பெரும் அர்ப்பணிப்புடன் ஈடுப்பட்டனர். அதன் பிரதிபலனாக அஸ்ஸகாபதுல் இஸ்லாமிய்யஹ் என்ற அற்புதமான நூலை தயாரித்து வெளியிட்டுள்ளனர். இனிமையான சொற்களை கொண்டும், புரிந்துகொள்ள இலகுவான வாக்கிய அமைப்பை கொண்டும் உருவாக்கப்பட்ட இந்த நூற்களை ஒரு பிள்ளை

முறையாக கற்கும் போது அப்பிள்ளை இஸ்லாமிய மார்க்கத்தில் அறிந்திருக்கு வேண்டிய கடமைகளை, நற்குணங்களை அறிந்த ஒரு பிள்ளையாக ஆகிவிடும்.

5 பாகங்களைக் கொண்ட இந்த நூலில் ஒவ்வொரு பாகமும் 3 பிரிவுகளை கொண்டுள்ளது. முதல் பிரிவானது இஸ்லாமிய கோட்பாடுகளை விபரிப்பதாகவும், இரண்டாம் பகுதி இஸ்லாமிய வணக்க வழிபாடுகளை நிறைவேற்றும் முறைகளை விபரிப்பதாகவும், மூன்றாவது பிரிவு இஸ்லாம் கற்றுத் தரும் நற்குணங்களை விபரிப்பதாகவும் அமைந்துள்ளது.

அஸ்ஸகாபதுல் இஸ்லாமிய்யஹ் என பெயரிடப்பட்ட இந்நூல் தாங்களது பிள்ளைகள் இவ்வுலகிலும், மறு உலகிலும் வெற்றிபெற வழிவருக்கமெனவும், தாங்களது பிள்ளை நேர்த்தியான நல்லொழுக்கமிக்க சமூகத்தை கட்டியெழுப்ப உதவி செய்யுமெனவும் நம்புகிறோம்.

# அஸ்ஸகாபதுல் இஸ்லாமிய்யஹ்

# பாகம் - 04

# فصل العقائد

## இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடுகள் பற்றிய விபரம்

பாடம் : 1 الدرس :1

## الشهادتان

## இரு ஷஹாதாக்கள்

الشهادتان هما أشهد أن لا إله إلا الله وأشهد أن محمدا رسول الله ﷺ

فيجب على من أراد الدخول في دين الإسلام النطق بالشهادتين فورا بنية الدخول في الإسلام مع اعتقاد معناهما

இரு ஷஹாதாக்கள் எனப்படுவது

أَشْهَدُ أَنْ لَا إِلهَ إِلَّا اللهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا رَسُوْلُ اللهِ ﷺ

என்பதாகும்.

இஸ்லாத்தில் நுழைய விரும்புவோர், இரு ஷஹாதாக்களின் கருத்தை உள்ளத்தால் உறுதி கொண்டு, இஸ்லாத்தில் நுழையும் நோக்கில் அவற்றை உடனடியாக மொழிவது கடமையாகும்.

ومعنى أشهد أن لا إله إلا الله :

أعتقد بقلبي وأعترف بلساني أن لا معبود بحق إلا الله أي لا أحد يستحق أن أتذلل له نهاية التذلل إلا الله تعالى

أَشْهَدُ أَنْ لَا إِلهَ إِلَّا اللهُ என்பதன் பொருள் :- உண்மையில் வணங்கி வழிபடத்தகுதியானவன் அழ்ழாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை அதாவது நான் பணிவின் உச்சகட்டத்தை செலுத்த அழ்ழாஹ்வைத் தவிர வேறு யாரும் தகுதிபெறவேமாட்டார்கள். என நாவினால் ஏற்று உள்ளத்தினால் உறுதி கொள்கிறேன்.

ومعنى أشهد أن محمدا رسول الله ﷺ أعتقد بقلبي وأعترف بلساني أن سيدنا محمد بن عبدالله بن عبد المطلب بن هاشم بن عبد مناف القرشي عبد الله ورسوله مرسل إلى جميع الخلق من إنس وجن وعرب وعجم وهو من قبيلة قريش أشرف قبائل العرب ولد بمكة وبعث بها وهاجر إلى المدينة ودفن فيها وهو خاتم الأنبياء والمرسلين وأفضلهم عليهم الصلاة والسلام فيجب التصديق بجميع ما أخبر به وبلغه عن الله تعالى

أَشْهَدُ أَنْ مُحَمَّدًا رَسُوْلُ اللهِ என்பதன் பொருள் :- நிச்சயமாக مُحَمَّدُ بْنُ عَبْدِ اللهِ بْنِ عَبْدِ الْمُطَّلِبِ بْنِ هَاشِمِ بْنِ عَبْدِ مَنَافٍ الْقُرَشِيُّ அவர்கள் அழ்ழாஹ்வுடைய அடியாரும் தூதருமாவார்கள் எனவும் இன்னும் மனித வர்க்கத்தினர், ஜின்வர்க்கத்தினர், அறபிகள், அறபியல்லாதோர்கள் அனைத்து படைப்பினங்களுக்கும் தூதராக அனுப்பபட்டவர் எனவும் உள்ளத்தினால் உறுதி கொண்டு நாவால் மொழிகிறேன். அவர்கள் அறபி கோத்திரங்களில் சிறந்த கோத்திரமாகிய குறைஷி கோத்திரத்தை சேர்ந்தவர்கள். அவர்கள் மக்காவில் பிறந்து அங்கேயே அவர்களுக்கு முதன்முதலாக வஹியும் அருளப்பட்டது. இன்னும் மதீனாவிற்க்கு ஹிஜ்ரத்தை மேற்கொண்டார்கள். மேலும் அங்கேதான் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அவர்களே அனைத்து நபிமார்களிலும் ரஸூல்மார்களிலும் இறுதியானவரும், மிகச்சிறந்தவருமாவார். அவர்கள் மீது ஸலாதும் ஸலாமும் உண்டாகட்டுமாக.

அவர்கள் அறிவித்தவைகள், எத்திவைத்தவைகள் அனைத்தையும் உண்மைப்படுத்துவது கடமையாகும்.

أي نزل عليه الوحي وهو بمكة بغار حراء

قال الإمام ذوالنون المصري : مهما تصورت ببالك فالله بخلاف ذلك

***இமாம் துன் நூன் அல் மிஸ்ரீ ؓ அவர்கள் கூறியுள்ளார்கள் :***

***“நீ உனது உள்ளத்தினால் அழ்ழாஹ்வை எவ்வாறெல்லாம் கற்பனை செய்தாலும் அவன் அதற்கும் ஒப்பாகமாட்டான்.”***

# اسئلة

பாடம் : 2 الدرس : 2

## أول الواجبات معرفة الله تعالى ومعرفة الرسول

## ஒரு மனிதன் செய்யவேண்டிய முதல் கடமை அழ்ழாஹ்வையும் அவனது தூதரையும் அறிவதாகும்

قال الله تعالى :

فاعلم أنه لا إله إلا الله

سورة محمد

***அழ்ழாஹ் தஆலா கூறியுள்ளான் :***
***விளக்கம் :***
***"நிச்சயமாக அழ்ழாஹ்வைத் தவிர (உண்மையாக) வணங்கப்படத் தகுதியானவன் வேறெவரும் இல்லை என்பதை நீர் அறிந்து கொள்வீராக!"***
***(அத்தியாயம் : முஹம்மத் வசனம் : 19)***

أول ما يجب على الإنسان معرفة الله ومعرفة رسوله ﷺ

ومعرفة الله تكون بمعرفة مايجب لله وما يستحيل على الله ومايجوز في حقه

ஒரு மனிதன் செய்யவேண்டிய முதல் கடமை அழ்ழாஹ்வையும் அவனது தூதரையும் அறிவதாகும்.

அழ்ழாஹ்வை அறிவதென்பது :- அவனுக்கு வாஜிபான, முஸ்தஹீலான (இருக்கக்கூடாத) ஜாஇஸான தன்மைகளை அறிந்துகொள்வதன் மூலமேயாகும்.

ويجب لله صفات الكمال التي تليق به كالعلم والقدرة والإرادة ويستحيل عليه الجهل والعجز وكل صفات الحدوث كصفات البشر

ويجوز فيه خلق المخلوقات وإعدامها

அல்லாஹ் உலகில் உள்ள அனைத்து விடயங்களும் உண்டாகுவதற்கு முன்பே எந்தவொரு ஆசானின் உதவியுமின்றி அவைகளை நன்கறிந்தவன், அல்லாஹ் சீரான பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளக் கூடிய அனைத்து வஸ்துக்கள் மீதும் வல்லமையுடையவன், அனைத்து விடயங்களும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடைபெறும் இது போன்ற அல்லாஹ்வுக்கு தகுதியான பரிபூரணத்தன்மைகள் வாஜிபாகும். இன்னும் அறியாதவனாக இருத்தல், இயலாதவனாக இருத்தல் மேலும் மனிதர்களின் தன்மைகளைப் போன்ற புதிதாக உருவாகக்கூடிய தன்மைகள் ஆகியன அல்லாஹ்வுடைய விடயத்தில் முஸ்தஹீலாகும். (அசாத்தியமானதாகும்) இன்னும் படைப்புக்களை படைப்பதும், படைக்காமல் இருப்பதும் அவனுடைய ஹக்கிலே ஜாஇஸாகும்.

قال رسول الله ﷺ :

أفضل الأعمال إيمان بالله ورسوله

رواه البخاري

***அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள் :***

***“மிகச் சிறந்த அமல் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் முறைப்படி ஈமான் கொள்வதாகும்.”***

**(அறிவித்தவர் : இமாம் புஹாரீ)**

قال الغزالي : لا تصح العبادة إلا بعد معرفة المعبود

***இமாம் கஸ்ஸாலி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :***

**“ வணங்கப்பட வேண்டிய அழ்ழாஹ்வை முறைப்படி அறியாமல் மேற்கொள்ளப்படும் வணக்கம் நிறைவேறாது.”**

ومعرفة الرسول تكون بمعرفة ما يجب له وما يستحيل له وما يجوز في حقه

அழ்ழாஹ்வின் தூதரை அறிவதென்பது : அவர்களுக்கு வாஜிபான, முஸ்தஹீலான, ஜாஇஸான தன்மைகளை அறிந்துகொள்வதன் மூலமேயாகும்.

فيجب له الصدق والأمانة والشجاعة والذكاء وتبليغ الرسالة ويستحيل عليه : الكذب والغش والجبن والكفر والكبائر صغائر الخسة قبل أي يصبح نبيا وبعد أن صار نبيا ويجوز في حقه : الأكل والشرب والنوم والزواج ونحو ذلك وكذلك جميع الأنبياء

உண்மை பேசுதல், நேர்மையாக நடத்தல், வீரம், புத்திகூர்மை, தூதை முழுமையாக எத்திவைத்தல் ஆகியவிடயங்கள் அந்த தூதரிடம் கட்டாயம் இருக்க வேண்டியவைகளாகும். மேலும் பொய் பேசுதல், மோசடி செய்தல், மடமை, கோழைத்தனம், நிராகரிப்பு (குப்ர்) பெரும் பாவங்கள், இழிவை ஏற்படுத்தும் சிறு பாவங்களாகிய விடயங்கள் அவர் மீது நபித்துவத்திற்கு முன்னரும், பின்னரும் முஸ்தஹீலாகும். மேலும் சாப்பிடுதல், பருகுதல், உறங்குதல், திருமணம் முடித்தல் போன்றவை அவர் மீது ஜாஇஸாகும். அனைத்து நபிமார்களையும் மேற்குறிப்பிட்டது போன்றே நம்ப வேண்டும்.

صفات الواجبة لله :

1. الوجود
2. الوحدانية
3. القدم
4. البقاء
5. القيام بالنفس
6. القدرة
7. الإرادة
8. العلم
9. السمع
10. البصر
11. الحياة
12. الكلام
13. المخالفة للحوادث

அழ்ழாஹ்வுக்கு இருக்கக்கூடிய பண்புகள்.

1. அல்வுஜூத் : அழ்ழாஹ் ஆரம்பமும் முடிவுமின்றியுள்ளவன்.

2. அல்வஹ்தானிய்யஹ்: அழ்ழாஹ் இணையின்றித் தனித்தவன். அவனுக்கு எந்த ஒரு இணையுமில்லை. உண்மையில் வணங்கி வழிப்படத்தகுதியானவன் அவனையன்றி வேறுயாருமில்லை.

3. அல்கிதம் : அழ்ழாஹ் அவனது உள்ளமைக்கு எவ்வித ஆரம்பமின்றி உள்ளான்.

4. அல்பகாஉ : அழ்ழாஹ் அவனது உள்ளமைக்கு எவ்வித முடிவுமின்றி உள்ளான். அவன் அழியவும்மாட்டான், மரணிக்கவும் மாட்டான்.

5. அல்கியாமு பிந்நப்ஸ் : அழ்ழாஹ் எதன் பக்கமும் தேவைகாண மாட்டான்.

6. அல்குத்ரத் : அழ்ழாஹ் சீரான பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளக் கூடிய அனைத்தின் மீதும் வல்லமையுடையவன்.

7. அல்இராதஹ் : அனைத்து விடயங்களும் அழ்ழாஹ்வின் நாட்டப்படியே நடைபெறும்.

8. அல்இல்மு : அழ்ழாஹ் உலகில் உள்ள அனைத்து விடயங்களும் உண்டாகுவதற்கு முன்பே எந்தவொரு ஆசானின் உதவியுமின்றி அவைகளை நன்கறிந்தவன்.

9. அஸ்ஸம்உ : அழ்ழாஹ் காதுகளும், எவ்வித கருவியுமின்றி கேட்பவன்.

10. அல்பஸரு : அழ்ழாஹ் கண்விழிகளும், எவ்வித கருவிகளுமின்றி பார்ப்பவன்.

11. அல்ஹயாத் : அழ்ழாஹ் மரணமில்லாதவன் அவனது மரணமில்லாத தன்மைக்கு உயிர் தன்மையோ, சடத்தன்மையோ, உள்ளமோ இல்லை.

12. அல்கலாம் : அழ்ழாஹ் நாவோ, இரு உதடுகளோ இன்றி பேசுபவன். அவனது பேச்சு அறபு பாஷையாகவோ அது அல்லாத ஏனைய பாஷ'யாகவோ இல்லை. அவனது பேச்சு எங்களது பேச்சுக்கு முற்றிலும் மாற்றமானது.

13. முஹாலபது லில்ஹவாதிஸ் : அழ்ழாஹ் படைப்புகளுக்கு மாற்றமானவன்.

أسئلة

பாடம் : 3 | الدرس : 3

## الإيمان والتقوى
## ஈமானும் தக்வாவும்

قال الله تعالى :
يا أيها الذين ءامنوا اتقوا الله ولتنظر نفس ماقدمت لغد
سورة الحشر

***அழ்ழாஹ் தஆலா கூறியுள்ளான் :***

***விளக்கம் :***
***"அழ்ழாஹ்வையும் அவனது தூதரையும் ஈமான் கொண்ட மு.ஃ.மின்களே! உங்கள் மீது விதியாக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவீராக மேலும் உங்களுக்கு தடைவிதிக்கப்பட்ட ஹறாமானவற்றை தவிர்ந்து கொள்வீராக. ஒவ்வொருவரும் விசாரனை தினத்திற்காக எதனை தயார்செய்திருக்கின்றனர் என்பதைதையும் நன்கு சிந்தித்துக்கொள்ளவும்."***
***(அத்தியாயம் : அல்-ஹஷ்ர்)***

أمر الله تعالى المؤمنين في هذه الآية بالتقوى

அழ்ழாஹ் இந்த வசனத்தில் மு.ஃ.மின்களுக்கு தக்வாவை கொண்டு ஏவியுள்ளான்.

والتقوى هي : أداء الواجبات واجتناب المحرمات

தக்வா என்பது : கடமைகளை நிறைவேற்றுவதும், தடுக்கப்பட்டவைகளை தவிர்ந்து கொள்வதுமாகும்.

وأول وأفضل الواجبات هو الإيمان بالله ورسوله ثم بعد ذلك الصلاة والصيام ونحوهما

அழ்ழாஹ்வையும் அவனது தூதரையும் முறையாக அறிந்து ஈமான் கொள்வது கடமைகளில் முதன்மையானதும் சிறந்ததுமாகும். பின்னர் தொழுகை, நோன்பு போன்ற கடமைகளுமாகும்.

وأكبر الذنوب وأشدها هو الكفر بالله تعالى وهو الذنب الذي لا يغفره الله تعالى لمن مات عليه وما سواه من الذنوب كالسرقة وشرب الخمر وأكل الربا يغفرها الله لمن شاء من عباده المؤمنين

அழ்ழாஹ்வை நிராகரிப்பது பாவங்களில் மிகப்பெரியதும், மிகக் கொடூரமானமானதுமாகும். இப்பாவத்துடன் மரணித்தவரை அழ்ழாஹ் மன்னிக்கவேமாட்டான். இது தவிரவுள்ள திருடல், மது அருந்தல், வட்டி சாப்பிடுதல் போன்ற பாவங்களை அழ்ழாஹ் மு.ஃ.மினான அவனது அடியார்களில் அவன் நாடியவர்களை மன்னிப்பான்.

قال الإمام أبو جعفر الطحاوي :
ومن وصف الله بمعنى من معاني البشر فقد كفر

**இமாம் அபு ஜ.ஃ.பர் அத்-தஹாவி ﵁ அவர்கள் கூறியுள்ளார்கள் :**

**“யார், மனிதர்களின் தன்மைகளில் ஒரு தன்மையை அழ்ழாஹ்வுக்கு இருப்பதாக கூறுவாரோ அவர் காபிராகிவிடுவார்.”**

فالذين ماتوا على الإيمان والتقوى على قسمين :
قسم ماتوا على الإيمان والتقوى فهؤلاء لا عذاب عليهم في القبر ولا في الآخرة
وقسم ماتوا على الإيمان وهو من أهل الكبائر أي كانوا يتركون الصلاة والصيام ويشربون الخمر ويأكلون لحم الخنزير مثلا فهؤلاء منهم من يسامحهم الله ويغفر لهم ولا يعذبهم أي يتركون الجنة بلا عذاب ولكن مرتبتهم دون مرتبة الأتقياء ومنهم من يعذبهم ثم يدخلهم الجنة خالدين فيها

ஈமானுடன் மரணித்தவர்கள் இரு பிரிவினர்களாவார்கள்.

ஒரு பிரிவினர் ஈமானுடனும் தக்வாவுடனும் மரணித்தவர்கள். இவர்களுக்கு கப்ரிலும், மறுமையிலும் எந்த வேதனையும் கிடையாது.

மற்ற பிரிவினர் : பெரும் பாவிகளாக ஈமானுடன் மரணித்தவர்கள். உதாரணமாக தொழுகை, நோன்பை விடுபவர்களாகவும், மது அருந்துபவர்களாகவும் பன்றி இறைச்சி சாப்பிடக்கூடியவர்களாகவும் இருந்தவர்கள். அழ்ழாஹ் அவர்களில் நாடியோரை மன்னிப்பான் மேலும் அவர்களை வேதனை செய்யமாட்டான். அதாவது எவ்வித தண்டனையுமின்றி சுவனம் நுழைவார்கள். என்றாலும் இவர்களுடைய அந்தஸ்து தக்வாதாரிகளுடைய அந்தஸ்தைவிடவும் குறைவானது. இன்னும் இவர்களில் சிலரை வேதனை செய்வான். பின்னர் அவர்களை சுவனம் நுழைவித்து அதிலே நிரந்நதரமாக தங்கவைப்பான்.

أسئلة

பாடம் : 4 الدرس : 4

## الإسلام دين جميع الأنبياء
## இஸ்லாம் அனைத்து நபிமார்களின் மார்க்கமாகும்

قال الله تبارك وتعالى :
ومن يبتغ غير الإسلام دينا فلن يقبل منه
سورة ءال عمران

***அல்லாஹ் தஆலா கூறியுள்ளான் :***

***விளக்கம் :***

***"யார் இஸ்லாம் அல்லாத வேறு ஒரு மார்க்கத்தை பின்பற்றுவாரோ அந்த மார்க்கத்தை அல்லாஹ் அவரிடமிருந்து ஏற்றுக்கொள்ளமாட்டான்."***

***(அத்தியாயம் : ஆல இம்ரான் வசனம் : 85)***

وقال تعالى أيضا :
إن الدين عند الله الإسلام
سورة ءال عمران

***அல்லாஹ் தஆலா கூறியுள்ளான் :-***

*விளக்கம் :*

**"நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாமாகும்."**

***(அத்தியாயம் : ஆல இம்றான் வசனம் : 19)***

فالدين الحق عند الله هو الإسلام واتباعه فيه السعادة في الآخرة وقد أرسل الله الأنبياء وهو رجال صادقون خصهم بالنبوة لتعليم الناس عقيدة الإسلام وما فيه مصالح دينهم ودنياهم

அல்லாஹ்விடம் பொருந்திக்கொள்ளப்பட்ட உண்மையான சரியான மார்க்கம் இஸ்லாமாகும்.
அதனைப் பின்பற்றுவதில்தான் மறுமையின் வெற்றி உள்ளது. அல்லாஹ், நபிமார்களை அனுப்பினான். அவர்கள் ஆண்களாகவும் உண்மைபேசுபவர்களாகவும் உள்ளனர். அல்லாஹ், அவர்களை இஸ்லாமிய கொள்கையை மக்களுக்கு கற்றுக்கொடுப்பற்காகவும், இன்னும் மார்க்க மற்றும் உலக நலவுகள் எதிலே உள்ளதோ அவற்றையும் கற்றுக்கொடுப்பதற்காகவும் தெரிவுசெய்துள்ளான்.

وكل الأنبياء مسلمون يؤمنون بأن الله واحد لا شريك له أولهم ءادم وءاخرهم محمد ﷺ وعلى سائر إخوانه النبيين وسلم
أما شرائعهم فكانت تختلف بعضها عن بعض ففي شريعة عيسى وموسى عليهما السلام كان المسلون يصلون صلاتين في اليوم والليلة أما في شريعة محمد ﷺ فالمسلون يصلون خمس صلوات في اليوم والليلة

அனைத்து நபிமார்களும் அல்லாஹ் இணையின்றி தனித்தவன் என்று ஈமான் கொண்ட முஸ்லிம்களாகும். அவர்களில் முதன்மையானவர் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் ஆவார்கள். இறுதியானவர் அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ ஆவார்கள். (அவர்கள் மீதும் ஏனைய நபிமார்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக) அவர்களுடைய ஷரீஅத் சட்டங்கள் சிலது சிலதை பார்க்கிலும் வேறுபட்டதாக காணப்பட்டது. மூஸா, ஈஸா அலைஹிமஸ்ஸலாம் அவர்களுடைய ஷரீஅத்தில் முஸ்லிம்கள் ஒரு நாளையில் இருவேளை தொழுகைகளை நிறைவேற்றி வந்தனர். ஆல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்களுடைய ஷரீஅத்தில் முஸ்லிம்கள் ஒரு நாளையில் ஐவேளை தொழுகைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

أسئلة

பாடம் : 5 الدرس : 5

## صفات الأنبياء عليهم الصلاة والسلام

## அழ்ழாஹ்வின் தூதர்களின் பண்புகள்

قال الله تعالى
وكلا فضلنا على العالمين
سورة الأنعام

*அழ்ழாஹ் தஆலா கூறியுள்ளான் :*

*விளக்கம் :*

*“அழ்ழாஹ் அகிலத்தார் அனைவரை விடவும் அனைத்து நபிமார்களையும் சிறப்பாக்கிவைத்துள்ளான்.”*

*(அத்தியாயம் : அல்-அன்ஆம் வசனம் : 86)*

الأنبياء هم أفضل مخلوقات الله تعالى وهم صفوة البشر أرسلهم الله تعالى ليبلغوا الناس مصالح دينهم ودنياهم فهم موصوفون بالأخلاق الحسنة والصفات الحميدة

நபிமார்கள் அழ்ழாஹ்வுடைய படைப்புக்களில் மிகச் சிறந்தவர்களாவர். அவர்களை அழ்ழாஹ் மனிதர்களுக்கு, அவர்களினது மார்க்க மற்றும் உலக நலவுகளை எத்திவைப்பதற்காக அனுப்பிவைத்தான். அவர்கள் சிறந்த நற்பண்புகளையும், போற்றப்படும் குணங்களையுமுடையவர்கள்.

فمن أخلاقهم الحسنة أنهم كلهم صادقون أذكياء أمناء موصوفون بالعفة والشجاعة فلن يكن أي من الأنبياء كذابا أو غبيا وليس بينهم من يخون الأمانة وليس بينهم من كان رذيلا أو جبانا

அவர்கள் உண்மை பேசக்கூடியவர்களாகவும், புத்திசாலிகளாகவும், நம்பிக்கைக்குரியவர்களாகவும் இருப்பது அவர்களது நற்குணங்களில் சிலதாகும். அவர்கள் பத்தினித்தனம், வீரம் போன்ற பண்புகொண்டவர்கள். அவர்களில் எந்த நபியும் பொய்யர்களாகவோ அல்லது மடமையுடையவர்களாகவோ இருக்கவில்லை. மேலும் அவர்களுக்கு மத்தியில் சதிமோசடி செய்பவர்கள், இழிவானவர்கள், கோழைகள் இருக்கவில்லை.

والأنبياء لا يصابون بالأمراض المنفرة كخروج الدود من أبدانهم ونحو ذلك ولا يصابون بالجنون

மேலும், அவர்களை விட்டும் மக்களை விரண்டோடச் செய்யக்கூடிய நோய்களும் அவர்களுக்கு ஏற்படமாட்டாது. உதாரணமாக அவர்களது மேனியிலிருந்து புழு வெளியாகுவதை குறிப்பிடலாம். இது போன்றவைகள் நபிமார்களுக்கு ஏற்படமாட்டாது. மேலும் அவர்களுக்கு பைத்தியமும் ஏற்படமாட்டாது.

فالأنبياء عليهم السلام
موصوفون بالصدق فيستحيل عليهم الكذب

நபிமார்கள் (அலைஹிமுஸ்ஸலாம்)
உண்மை பேசும் பண்பு கொண்டவர்கள். பொய் பேசுவது அவர்களிடம் அறவே காணப்படமாட்டாது.

وموصوفون بالفطانة فيستحيل عليهم البلادة والغباوة

கூர்மையான புத்தி கொண்டவர்கள். மடத்தனம், முட்டாள்தனம் அவர்களிடம் அறவே காணப்படமாட்டாது.

وموصوفون بالأمانة فيستحيل عليهم الخيانة

நேர்மையாக நடக்கும் பண்பு கொண்டவர்கள். ஏமாற்றுதல், சதிசெய்தல் அவர்களிடம் அறவே காணப்படமாட்டாது.

وموصوفون بالعفة فيستحيل عليهم الرذالة والسفاهة

அவர்கள் பத்தினித்தனம் கொண்டவர்கள். இழிவு, மடமை அவர்களிடம் அறவே காணப்படமாட்டாது.

وموصوفون بالشجاعة فيستحيل عليهم الجبن

அவர்கள் வீரம் கொண்டவர்கள். கோழைத்தனம் அவர்களிடம் அறவே காணப்படமாட்டாது.

أسئلة

பாடம் : 6 الدرس : 6

**الفرق بين الأنبياء والرسل عليهم السلام**

**நபிமார்களுக்கும் ரஸூல்மார்களுக்கும் இடையிலான வேறுபாடு**

قال الله تعالى
ومن يكفر بالله وملائكته وكتبه ورسله واليوم الآخرفقد ضل ضلالا بعيدا
سورة النساء

***அழ்ழாஹ் தஆலா கூறியுள்ளான் :***
***விளக்கம் :***
***"யார் அழ்ழாஹ்வையும் அவனது மலக்குமார்களையும் அவனால் அருளப்பட்ட வேதங்களையும் அவனது நபிமார்களையும் மறுமை நாள் நிகழவிருப்பதையும் ஈமான் கொள்ளாது நிராகரிக்கின்றாரோ அவர் நேர்பாதையை விட்டும் மிகத் தூரமாகி விட்டார்."***
***(அத்தியாயம் : அந்-நிஸா)***

والمراد بالرسالة هنا ما يعم النبوة لأن الرسل كلهم أنبياء ولكن ليس كل من الأنبياء رسلا

மேற்கூறப்பட்ட திருவசனத்தில் ரிஸாலத் எனப்படுவது நுபுவ்வத்தையும் உள்ளடக்கிக் கொள்ளும் காரணம் அனைத்து ரஸூல்மார்களும் நபிமார்களாகும். ஆனால் அனைத்து நபிமார்களும் ரஸூல்மார்களல்ல.

لأن الرسول هو نبي أوحى الله إليه بشرع جديد أي أحكام جديدة يعلمها للذين أرسل إليهم

ரஸூல் என்பவர் : அழ்ழாஹ் வஹியின் மூலம் அறிவித்துக் கொடுத்த புதிய மார்க்க சட்டங்களை பெற்று, அதனை தன் சமூகத்தாருக்கு எத்திவைப்பவராகும்.

أما النبي فهو الذي أوحي إليه أن يعمل بشرع الرسول الذي كان قبله ولم يوح إليه بشرع جديد

நபி என்பவர் : அவருக்கு முன் இருந்த ரஸூலுக்கு வழங்கப்பட்ட சட்டங்களை அமுல்படுத்துமாறு அறிவிக்கப்பட்டிருப்பார். அவருக்கு புதிய சட்டங்கள் அறிவிக்கப்பட்டருக்கமாட்டாது.

قال العلماء : كل رسول نبي وليس كل نبي رسولا

இஸ்லாமிய அறிஞர்கள் கூறியுள்ளார்கள்.

"அனைத்து ரஸூல்மார்களும் நபிமார்கள். அனைத்து நபிமார்களும் ரஸூல்மார்களல்ல."

والأنبياء والرسل كلهم يبلغون الدعوة إلى الناس

ولهذا الأمر فإن عدد الأنبياء كبيرة جدا أما الرسل فعددهم ثلاثمائة وثلاثة عشر رسولا

وقد ورد في القرءان أسماء خمسة وعشرين نبيا هم :

அனைத்து நபிமார்களும், ரஸூல்மார்களும் மக்களுக்கு இஸ்லாமிய கொள்கையை எத்திவைத்தார்கள். இதனால் நபிமார்களின் எண்ணிக்கை அதிகமாகவும், ரஸூல்மார்களின் எண்ணிக்கை 313 ஆகவும் காணப்பட்டது. 25 நபிமார்கள் பெயர்கள் அல்குர்ஆனிலே கூறப்பட்டுள்ளன.

1. ءادم
2. إدريس
3. نوح
4. هود
5. صالح
6. إبراهيم
7. إسماعيل
8. إسحق
9. يعقوب
10. لوط
11. يوسف
12. أيوب

13. شعيب
14. موسى
15. هارون
16. ذوالكفل
17. داود
18. سليمان
19. إلياس
20. اليسع
21. يونس
22. زكريا
23. يحيى
24. عيسى
25. محمد صلى الله عليهم وسلم

1. ஆதம் அலைஹிஸ்ஸலாம்
2. இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம்
3. நூஹ் அலைஹிஸ்ஸலாம்
4. ஹூத் அலைஹிஸ்ஸலாம்
5. ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம்
6. இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம்
7. இஸ்மாஈல் அலைஹிஸ்ஸலாம்
8. இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம்
9. யஃகூப் அலைஹிஸ்ஸலாம்
10. லூத் அலைஹிஸ்ஸலாம்
11. யூஸுப் அலைஹிஸ்ஸலாம்
12. ஐயூப் அலைஹிஸ்ஸலாம்
13. ஷுஐப் அலைஹிஸ்ஸலாம்
14. மூஸா அலைஹிஸ்ஸலாம்
15. ஹாரூன் அலைஹிஸ்ஸலாம்
16. துல்கிப்ல் அலைஹிஸ்ஸலாம்

17. தாவூத் அலைஹிஸ்ஸலாம்
18. ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம்
19. இல்யாஸ் அலைஹிஸஸ்ஸலாம்
20. அல்யஸஃ அலைஹிஸ்ஸலாம்
21. யூனுஸ் அலைஹிஸ்ஸலாம்
22. ஸகரிய்யா அலைஹிஸ்ஸலாம்
23. யஹ்யா அலைஹிஸ்ஸலாம்
24. ஈஸா அலைஹிஸ்ஸலாம்
25. முஹம்மத் அலைஹிஸ்ஸலாம்

أسئلة

பாடம் : 7 الدرس : 7

## الفرق بين المعجزة والسحر
## மு∴ஜிஸத்துக்கும் சூனியத்துக்கும் இடையிலான வேறுபாடு

خلق الله تعالى الإنسان وجعل له عقلا يميز به الحسن من القبيح وأرسل أنبياءه ليرشدوهم إلى طريق النجاة ولكن كثيرا من الناس يعاندون عن قبول الحق فلا يستعملون عقولهم لما خلقت له

அழ்ழாஹ் மனிதர்களைப் படைத்து, அவர்களுக்கு நல்லதையும், கெட்டதையும் வேறுபிரித்தறியக்கூடிய பகுத்தறிவையும் படைத்தான். வெற்றிப் பாதையின்பால் அவர்களுக்கு வழிகாட்ட அவனது நபிமார்களையும் அனுப்பினான். ஆனாலும் அதிகமான மனிதர்கள் உண்மையை ஏற்காமல் பிடிவாதம் கொள்கின்றனர். எதற்காக அவர்களுடைய பகுத்தறிவுகள் படைக்கப்பட்டனவோ அதற்காக அவர்களுடைய பகுத்தறிவை பயன்படுத்தாமலும் இருக்கின்றனர்.

وقد أيد الله تعالى رسله الكرام بالمعجزات والمعجزة هي أمر خارق للعادة أي على خلاف الأشياء التي يعتادها الناس وهي تحصل على يد الأنبياء وتوافق دعواهم ولايستطيع أحد من الناس أن يعارضها بالمثل كخروج الماء من بين أصابع النبي وانقلاب العصا ثعبانا لسيدنا موسى

அழ்ழாஹ் தஆலா சங்கையான ரஸூல்மார்களுக்கு மு∴ஜிஸத்களை வழங்கி பலப்படுத்தியுள்ளான்.
மு∴ஜிஸத் என்பது : வழமைக்கு மாற்றமான ஒரு விடயமாகும். அதாவது மக்கள் வழமையாக செய்து வரும் விடயங்களுக்கு மாற்றமானதாகும். இந்த மு∴ஜிஸத்கள் நபிமார்களின் மூலமாகவே வெளிப்படும். மேலும் அவர்களுடைய வாதத்துக்கு தோதுவானதாகவே இருக்கும். மேலும் இதற்கு எதிராக இது போன்ற ஒன்றை எந்தவொரு மனிதனாலும் கொண்டுவர முடியாது.
உதாரணம் : அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்களுடைய பறக்கத் பொருந்திய கைகளிலிருந்து நீர் வெளிப்பட்டமை

இன்னும் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய தடி பாம்பாக மாறியமை.

والمعجزة ليست سحرا لأن السحر يتوصل إليه بالتعلم والممارسة ويعارض بسحر مثله أي قد يأتي ساحر بسحر أقوى فلذلك ءامن سحرة فرعون بموسى رسولا من عند الله لما انقلبت عصاه ثعبانا حقيقيا وابتلعت حبالهم وعصيهم التي خيل للناس أنها حيات لأنهم علموا أن ذلك ليس سحرا والسحرفعله من كبائر الذنوب

மு.ஃஜிஸத் என்பது சூனியமல்ல.

காரணம் சூனியம் என்பது அதனைக்கற்று அதற்கான பயிற்சி எடுத்து அதனை பெற்றுக் கொள்ள முடியும். ஒரு சூனியத்தை அது போன்ற இன்னொரு சூனியத்தால் முறியடிக்கமுடியும். அதாவது சிலவேளை ஒரு சூனியக்காரன் இருந்ததை விட ஒரு பலமான சூனியத்தைக் கொண்டுவருவான்.

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தடி உண்மையான பாம்பாக மாறி, மக்களுக்கு பிரம்மையாக காட்டப்பட்ட சூனியக்காரர்களுடைய கயிறுகளையும், தடிகளையும் விழுங்கிய போது பிர்அவ்னின் சூனியக்காரர்கள் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹ்வின் தூதராக ஏற்றனர். ஏனெனில் இது (மூஸா அலைஹிஸ்ஸலாமின் மு.ஃஜிஸத்) சூனியமல்ல என்பதை அந்த சூனியக்காரர்கள் அறிந்து கொண்டனர். சூனியம் செய்வது பெரும்பாவத்தை சேர்ந்ததாகும்.

أسئلة

பாடம் : 8 الدرس : 8

## الإيمان بما جاء عن سيدنا محمد ﷺ

## அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மூலமாக வந்த விடயங்களை நம்பிக்கை கொள்ளுதல்

قال الله تعالى :
وما ءاتاكم الرسول فخذوه وما نهاكم عنه فانتهوا
سورة الحشر

***அல்லாஹ் தஆலா கூறியுள்ளான் :***
***விளக்கம் :***

***"அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கட்டளையிட்ட கடமைகளை நிறைவேற்றுவதோடு, அவர்கள் தடுத்த விடயங்களை விட்டும் தவிர்ந்து அவர்களுக்கு கட்டுப்படுவீர்களாக."***
(அத்தியாயம் : அல்-ஹஷ்ர்)

أمرنا الله تبارك وتعالى في هذه الآية باتباع الرسول ﷺ فيما أمرنا به واجتناب ما نهانا عنه

முஹம்மத் ﷺ அவர்கள் எவற்றை ஏவினார்களோ மற்றும் எதை விட்டும் எம்மைத் தடுத்தார்களோ அந்த விடயங்களில் அவர்களைப் பின்பற்றுமாறு அல்லாஹ் தஆலா இவ்வசனத்திலே நமக்குக் கட்டளையிட்டுள்ளான்.

لأن الرسول صادق في كل ما يبلغه عن الله تعالى

காரணம் அல்லாஹ்வினால் அறிவிக்கப்பட்ட அனைத்து விடயங்களையும் எத்திவைப்பதிலே உண்மையானவராக இருப்பார்.

قال الله تعالى : وما ينطق عن الهوى - إن هو إلا وحي يوحى
سورة النجم

***அல்லாஹ் தஆலா கூறியுள்ளான் :***
***விளக்கம் :***
***"நிச்சயமாக முஹம்மத் ﷺ அவர்கள் அல் குர்ஆன் என்பதாக எவைகளை எல்லாம் உங்களுக்கு போதித்தார்களோ அது எதுவும் அவரது சுய கருத்துகளோ அல்லது அவரது மனோ இச்சை கூறிய விடயங்களோ அல்ல. நிச்சயமாக அல் குர்ஆன் என்பதாக போதித்த அனைத்தும் அல்லாஹ்வினால் அவருக்கு வஹி மூலம் அருளப்பட்டவைகளே."***
***(அத்தியாயம் : அந்-நஜ்ம்)***

فكل ما أخبر به الرسول حق وصدق سواء ما كان من أمور الحلال أو الحرام أو كان إخبارا عما مضى من قصص الأنبياء أو ما سيحصل في المستقبل في الدنيا والآخرة

அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அறிவித்த எதிர்கால விடயங்கள், ஹலால், ஹறாம் சம்பந்தப்பட்ட விடயங்கள், நபிமார்களின் காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள், இம்மையிலும் மறுமையில் நடக்கக்கூடிய எதிர்கால விடயங்கள் அனைத்துமே உண்மையானதாகும்.

ومما أخبر به الرسول ﷺ عذاب القبر للكافرين وبعض عصاة المسلمين ونعيم القبر للمؤمنين الأتقياء والقيامة والحساب والثواب والعقاب والجنة والنار وغيرها من الأمور فالكفار يعذبون في قبورهم أما المؤمنون الصالحون فإن الله تعالى ينور قبورهم بنور كنور القمر ليلة البدر

அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அறிவித்த விடயங்களில் சில : காபிர்களுக்கும், சில முஸ்லிம்களுக்கும் மண்ணறையில் வேதனை வழங்கப்படுதல், தக்வா தாரியான மு∴மின்களுக்கு மண்ணறையில் சுகமான வாழ்வு கிடைத்தல். கியாமத் நாளில் விசாரிக்கப் படுதல், கூலி, தண்டனை பெறுதல் சுவர்க்கம் நரகம் நுழைதல் இன்னும் இது தவிர்ந்த ஏனைய விடயங்கள். காபிர்கள் கப்ருகளில் வேதனை செய்யப்படுவார்கள், ஸாலிஹான மு∴மின்களின்

கப்ருகளை அழ்ழாஹ் பௌர்ணமி இரவின் சந்திரனின் ஒளியைப் போன்று பிரகாசமாக்குவான்.

أسئلة

## الثواب والعقاب
## கூலியும் தண்டனையும்

قال الله تعالى
إن الأبرار لفي نعيم - وإن الفجار لفي جحيم
سورة الانفطار

***அழ்ழாஹ் தஆலா கூறியுள்ளான் :***
***விளக்கம் :***
***“நிச்சயமாக ஈமான் கொள்ள வேண்டிய அனைத்தையும் முறைப்படி ஈமான் கொண்ட மு.’.மின்கள் சுவன இன்பங்களை அனுபவிப்பார்கள். ஈமான் கொள்ள வேண்டிய விடயங்களை முறைப்படி ஈமான் கொள்ளாது இஸ்லாமிய கொள்கையை மறுத்தவர்கள் நரக வேதனையை அனுபவிப்பார்கள்.”***
***(அத்தியாயம் : அல்-இன்பிதார்)***

يجب الإيمان بأن الله تعالى يثيب المؤمنين على ما فعلوه من عمل صالح ويعذب الكفار على ما اقترفوه على كفر وذنوب وكذلك يعذب من شاء من عصاة المسلمين يوم القيامة وهو يوم الحساب

அழ்ழாஹ் மு.’.மின்கள் செய்த நல்லமல்களுக்கு கூலி கொடுப்பான், காபிர்கள் செய்த நிராகரிப்புக்காக மற்றும் பாவங்களுக்காக அவர்களைத் தண்டிப்பான் என ஈமான் கொள்வது அவசியமாகும். அழ்ழாஹ் கியாமத் நாளில் முஸ்லிம்களிலுள்ள பாவிகளில் நாடியவர்களை வேதனை செய்வான்.
அது தான் கேள்வி கணக்கினுடைய நாளாகும்.

- فالثواب هو ما يناله المؤمن في الآخرة مما يسره كالشرب من حوض النبي صلى الله عليه وسلم واجتياز الصراط ودخول الجنة حيث النعيم المقيم

கூலி என்பது : கியாமத் நாளில் ஒரு மு.ஃமினுக்கு சந்தோஷத்தை ஏற்படுத்தும் அனைத்து விடயங்களுமாகும்.

உதாரணம் : முஹம்மத் ﷺ அவர்களுடைய நீர் தடாகத்தில் நீர் அருந்துதல், ஸிராதுல் முஸ்தகீம் பாலத்தை கடந்து செல்லுதல், நிரந்தர இன்பமுடைய சுவனத்தில் நுழைதல்.

أما العذاب فهو مايسوء العبد يوم القيامة كتعرض الكفار لحر الشمس ودخولهم إلى جهنم حيث العذاب المقيم ويدخلها ايضا بعض عصاة المسلمين الذين ماتوا بلا توبة ولم يغفرالله لهم فيعذبون في النار فترة ثم بعد ذلك يخرجهم الله ويدخلهم الجنة لأنهم ماتوا على الإيمان

வேதனை என்பது : கியாமத் நாளில் ஒரு அடியானுக்கு கவலையை ஏற்படுத்தும் அனைத்து விடயங்களுமாகும்.

உதாரணம் காபிர்கள் சூரிய வெப்பத்திற்கு ஆளாகுதல், நிரந்தர வேதனையுடைய நரகில் நுழைதல்.

மேலும் மு.ஃமின்களில் தௌபாச் செய்யாது மரணித்து, மறுமை நாளில் அல்லாஹ்வின் மன்னிப்பைப் பெறாதவர்களை அல்லாஹ் நரகில் நுழைவிப்பான். மேலும் அல்லாஹ் நாடிய காலப்பகுதியளவு அதில் வேதனை செய்து பின்னர் அவர்களை நரகிலிருந்து வெளியேற்றுவான். அவர்கள் ஈமானுடன் மரணித்ததனால் அவர்களை சுவனம் நுழைவிப்பான்.

أسئلة

பாடம் : 10 الدرس : 10

## نعيم الآخرة
## மறுமை இன்பம்

قال الله تعالى
إن الذين ءامنوا وعملوا الصالحات لهم جنت النعيم
سورة لقمان

**அல்லாஹ் தஆலா கூறியுள்ளான் :**
**விளக்கம் :**
***"நிச்சயமாக யாரெல்லாம் உலகில் முறையாக ஈமான் கொண்டு, அமல்களையும் முறைப்படி மேற்கொண்டார்களோ அவர்களுக்கு மறுமை நாளிலே சுவனத்தின் இன்பங்கள் இருக்கின்றன."***
***(அத்தியாயம் : லுக்மான்)***

وعد الله المؤمنين الذين ادو الواجبات واجتنبوا المحرمات جنات واسعة فيها نعيم دائم لا يفنى ولا يزول فيها أنهار واسعة نهر من لبن ونهر من عسل ونهر من ماء ونهر من خمر لا يسكر ليس كخمر الدنيا وفيها روائح عطرة وفيها أشجار جميلة وقصور كبيرة

கடமைகளை நிறைவேற்றி, ஹறாமான விடயங்களை தவிர்ந்து நடந்த மு..மினான அடியார்களுக்கு அழியாத, நிரந்தர இன்பங்களையுடைய விசாலமான சுவனங்களை வழங்குவதாக அல்லாஹ் வாக்களித்துள்ளான். அவற்றில் பாலாறு, நீராறு, போதை ஏற்படுத்தாத மதுவாறு ஆகிய விசாலமான ஆறுகள் இருக்கின்றன. அந்த மது இவ்வுலகிலுள்ள மதுவைப் போன்றதல்ல. மேலும் சுயவனத்தில் நறுமணங்கள், அழகான மரங்கள், அரண்மனைகளும் உள்ளன.

والمؤمنون في الجنة في عمر واحد في سن ثلاث وثلاثين سنة حتى من مات هرما أو طفلا يصبح بهذا العمر

சுவர்க்கத்தில் அனைத்து மு.ஃ.மின்களும் 33 வயதுடையவர்களாகவே இருப்பார்கள். யாரெல்லாம் வயோதிபர்களாகவும், சிறு குழந்தைகளாகவும் மரணித்தார்களோ அவர்களும் மேற்குறித்த வயதுடையவர்களாக மாறிவிடுவார்கள்.

وكلهم جميلو الشكل بطول سيدنا ءادم عليه السلام

அவர்கள் அனைவரும் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய உயரத்தில் அழகிய தோற்றமுடையவர்களாக இருப்பார்கள்.

وكل من دخل الجنة لا يموت ولا يمرض ولا يحزن ولا يهرم ولا يتعب والجنة فوق السماء السابعة والعرش سقفها لا يدخلها الكفار أبدا وهي باقية لا تفنى ولا يفنى أهلها

சுவனம் நுழைந்த எவரும் மரணிக்கவோ, நோய்வாய்ப்படவோ, கவலைப்படவோ, முதுமையடையவோ, சோர்வடையவோ மாட்டார்கள்.

சுவனம் ஏழாவது வானத்திற்கு மேலாகவும் அர்ஷ் அதனுடைய முகடாகவும் உள்ளது. அதில் ஒருபோதும் காபிர்கள் நுழைய மாட்டார்கள். சுவனம் அழிவின்றி நிலையானதாகும். அதில் உள்ளவர்களும் அழிய மாட்டார்கள்.

أسئلة

# فصل العبادات

# வணக்க வழிபாடுகள் பற்றிய விபரம்

பாடம் : 1 الدرس : 1

أقسام المياه

تقسم المياه إلى عدة أقسام منها :

1. ماء طاهر أي طاهر مطهر
2. وماء طاهر غير مطهر
3. وماء نجس

நீரின் வகைகள்.

நீர் பல வகைப்படும்

அவைகளில் சில :-

- சுத்தமான நீர். (தானும் சுத்தம் ஏனையவற்றையும் சுத்தப்படுத்தக்கூடியது.)
- தான் மாத்திரம் சுத்தமான நீர். (ஏனையவற்றை சுத்தப்படுத்தமாட்டாது.)
- அசுத்தமான நீர்.

1. الماء الطهور : هو الماء الطاهر في نفسه المطهر لغيره أي يمكن الاغتسال منه والوضوء وإزالة النجاسة به كماء المطر أو البحر أوالنهر أو البئر أو العين

சுத்தமான நீர் :

அது தானும் சுத்தமாக இருந்து ஏனையவற்றையும் சுத்தப்படுத்தக்கூடியதாகும். அதாவது இவ்வகை நீரின் மூலமே குளித்தல், வுழூச்செய்தல், நஜீஸை நீக்குதல் போன்றவற்றை நிறைவேற்றலாம்.

மழை நீர், கடல் நீர், ஆற்று நீர், கிணற்று நீர், ஊற்று நீர் போன்றவைகளை இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

2. الماء الطاهر غير المطهر منه :
الماء المستعمل : هو الماء الذي استعمل في رفع الحدث غسلا كان أو وضوءا أو إزالة نجاسة إذا أزالها ولم تتغير إحدى صفاته أي لونه أو طعمه أو رائحته فهذا الماء طاهر في نفسه غير مطهر لغيره أي إن جمعناه لا نستطيع أن نستعمله بعد ذلك للغسل والوضوء وإزالة النجاسة إلا إذا كثر ولكن نستطيع استعماله لغسل الثياب غير المتنجسة مثلا

- தான் மாத்திரம் சுத்தமான நீர் (ஏனையவற்றை சுத்தப்படுத்தமாட்டாது.) அது குளித்தல் அல்லது வுழு செய்தல் போன்ற தொடக்குகளை நீக்குவதற்காக உபயோகிக்கப்பட்ட நீராகும். அல்லது நஜீஸை நீக்குவதற்கு உபயோகிக்கப்பட்டு, அந்த நீரின் தன்மைகளில் ( நிறம், சுவை, வாடை) ஏதேனும் ஒன்று மாற்றமடையாத நீராகும்.

இந்த நீரானது, தான் சுத்தமாக இருந்தாலும் ஏனையவற்றை சுத்தப்படுத்தமாட்டாது. அதாவது நாம் அதனை ஒன்று சேர்த்தால் கடமையான குளிப்பை நிறைவேற்றுவதற்கோ அல்லது வுழு செய்வதற்கோ அல்லது நஜீஸை நீக்குவதற்கோ உபயோகிக்க முடியாது. ஆனால் அந்த நீர் குல்லதைன் என்ற அளவில் அல்லது அதைவிட அதிகமான அளவில் இருந்தால் மாத்திரமே உபயோகிக்க முடியும்.

3. وأما الماء النجس : فهو الماء القليل الذي وقعت فيه نجاسة غير معفوعنها سواء إحدى صفاته أم لا وكذلك الماء الكثير إذا وقعت فيه نجاسة غيرت صفاته الثلاثة كلها أو بعضها أما إن لم تتغير صفاته فلا يتنجس والماء الكثير هو مقدار قلتين فأكثر والقلتان نحو مائة وأر بعة وتسعين ( 194 ) ليترا إذا اعتبر الذراع الشرعي ( 2 , 46 ) سنتم أما الماء القليل فهو ماكان دون القلتين

அசுத்தமான நீர் :

மன்னிக்கப்படாத நஜீஸ் விழுந்த குல்லதைனை விட குறைவான நீராகும். அதன் தன்மைகளில் எதாவது ஒன்று மாற்றமடைந்தாலும், மாற்றமடையாவிட்டாலும் சரி. (அது அசுத்தமான நீராகும்)

அதே போன்றுதான் குல்லதைன் அல்லது அதை விட அதிகமான நீரில் நஜீஸ் விழுந்து அதில் மூன்று தன்மைகளும் மாற்றமடைந்திருந்தாலோ அல்லது அவைகளில் சிலது மாற்றமடைந்திருந்தாலோ அந்நீர் அசுத்தமானதாகும்.

ஆனால் அந்நீரின் தன்மைகளில் ஏதும் மாற்றமடையவில்லையாயின் அது அசுத்தமானதாகமாட்டாது.

அதிகமான நீர் என்பது குல்லதைன் அளவு அல்லது அதைவிட அதிகமாகவுள்ள நீராகும்.

குல்லதைன் அளவு தண்ணீர் என்பது : 194 லீட்டர் அளவு தண்ணீராகும். (மார்க்க ரீதியிலான அளவீட்டில் ஒரு முழம் 46.2 சென்றி மீற்றர் என கணிக்கப்பட்டால்)

குறைவான நீர் என்பது குல்லதைன் அளவை விட குறைவான நீராகும்.

أسئلة

பாடம் : 2 | الدرس : 2

## التطهير من النجاسات
## அசுத்தங்களிலிருந்து சுத்தமாகுதல்

النجاسة على نوعين : عينية وحكمية

நஜீஸ் இரண்டு வகை :-

1. அய்னிய்யஹ் (ஏதாவதொரு) முறையில் புலப்படும் நஜீஸ்.
2. ஹுக்மிய்யஹ் (எந்த வகையிலும்) புலப்பாடாத நஜீஸ்.

النجاسة العينية : هي التي بقي جرمها أوالتي يدرك لها لون أو طعم أو ريح كنقطة دم على ثوب وتزال بصب الماء الطاهر المطهر عليها إلى يذهب جرمها وأوصافها

1. அய்னிய்யஹ் (ஏதாவதொரு) முறையில் புலப்படும் நஜீஸ் :

அந்நஜீஸ் அப்படியே தரிபட்டிருப்பதைக் குறிப்பிடலாம் அல்லது அந் நஜீஸின் நிறம் அல்லது அதன் சுவை அல்லது அதன் வாடை புலப்படக்கூடியதாக இருக்கும் நஜீஸை குறிப்பிடலாம்.

ஆடையின் மீது பட்ட இரத்தத் துளியைப் போன்று.
அந்நஜீஸின் அடையாளம், தன்மைகள் நீங்கும் வரை அதன் மீது தானும் சுத்தமான பிறரையும் சுத்தப்படுத்தக்கூடிய தண்ணீரை ஊற்றி சுத்தம் செய்ய வேண்டும்.

النجاسة الحكمية : وهي النجاسة التي ليس لها لون ولا طعم ولا ريح كبول أصاب ثوبا ثم جف فذهب جرمه وانقطع ريحه ولونه وطعمه فإنه يطهر بإجراء الماء الطاهر المطهر عليه

2. அய்னிய்யஹ் (எந்த வகையிலும்) புலப்படாத நஜீஸ்.

இவ்வகை நஜீஸ்களுக்கு நிறமோ, சுவையோ, வாடையோ இருக்கமாட்டாது.
உதாரணமாக சிறுநீர் ஆடையில் பட்டு பின்பு காய்ந்து அதன் அடையாளம், அதன் வாடை, நிறம், சுவை நீங்கிவிடுவதைப் போல. அது தானும் சுத்தமான ஏனையவற்றையும் சுத்தப்படுத்தக்கூடிய நீரை அதன் மீது ஊற்றுவதன் மூலம் சுத்தமாகி விடும்.

ثم إذا كانت النجاسة كلبية أو جنزية كأن أصاب ريق كلب أو خنزير يد إنسان أو ثوبه أو وعاءه فإنه يطهر بغسله سبع مرات بالماء الطاهر المطهر إحداهن ممزوجة بالتراب الطهور

மேற்கூறப்பட்ட நஜீஸ்கள் நாய் மற்றும் பன்றியின் நஜீஸாக இருந்தால் உதாரணமாக ஒரு மனிதனின் கையிலோ அல்லது அவனது ஆடையிலோ அல்லது பையிலோ நாய் அல்லது பன்றியின் எச்சில் பட்டுவிட்டால் அதனை நீரினால் ஏழு முறை கழுவி சுத்தம் செய்ய வேண்டும். அதில் ஒரு முறை சுத்தமான மண் கலக்கப்பட்ட நீரை உபயோகிப்பது மிக அவசியமாகும்.

وهناك نجاسة معفوعنها كرشاش بول لا يرى بالعين المجردة إذا وقع في الماء لا ينجسه وميتة ما ليس له دم يسيل إذا وقع في الماء ومات فيه لا ينجسه كالذباب والبرغش

கண்ணால் பார்க்க முடியாத சிறுநீர்த் துளி தண்ணீரில் விழுந்து விட்டால் அது அந்நீரை அசுத்தமாக்கமாட்டாது.
மேலும் ஓடும் இரத்தமில்லாத பிராணி (ஈ, நுளம்பு) தண்ணீரில் விழுந்து அதிலே மரணித்து விட்டால் அந்நீரை அது அசுத்தமாக்கமாட்டாது.

أسئلة

பாடம் : 3 الدرس : 3

## شروط الطهارة
## சுத்தத்தின் நிபந்தனைகள்

قال الله تعالى :
إن الله يحب التوابين ويحب المتطهرين
سورة البقرة

***அல்லாஹ் தஆலா கூறியுள்ளான் :***

***விளக்கம் :***
***" அவர்கள் செய்த பாவச் செயல்களை விட்டும் விலகி அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு வேண்டியவர்களை அல்லாஹ் ஏற்றுக் கொள்கிறான். தண்ணீரால் முழுமையாக சுத்தம் செய்வோரையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்கிறான்."***
***(அத்தியாயம் : அல்-பகரஹ் வசனம் : 222)***

وقال رسول الله ﷺ : الطهور شطر الإيمان – رواه مسلم
***அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் :***

***“சிறிய, பெரிய தொடக்குகள் மற்றும் அசுத்தங்களை விட்டும் சுத்தமாக இருப்பது ஈமானின் ஒரு பகுதியாகும்.”***
***(அறிவித்தவர் : இமாம் முஸ்லிம்)***

ومعنى الطهور : الطهارة من الحدثين الأكبر والأصغر ومن النجاسة

சுத்தம் என்பதன் பொருள் : சிறிய, பெரிய தொடக்குகள் மற்றும் அசுத்தங்களை விட்டும் சுத்தமாக இருத்தல்.

وللطهارة شروط لا بد منها حتى تكون صحيحة وهي :

**சுத்தத்திற்கு பல நிபந்தனைகள் உண்டு அந்த நிபந்தனைகள் சுத்தம் நிறைவேறுவதற்கு அவசியமானவைகளாகும் :**

1. الإسلام : أي أن يكون الشحص مسلما فلا تصح الطهارة من كافر

1) **இஸ்லாம்** :- அதாவது அவன் முஸ்லிமாக இருக்க வேண்டும். எனவே ஒரு காபிரிடத்திலிருந்து சுத்தம் நிறைவேற மாட்டாது.

2. والتمييز : وهو أي يبلغ الولد من العمر إلى حيث يفهم الخطاب ويرد الجواب ويستقل بالأكل والشرب ويتجنب الجساسات ( وغالب سن التمييز ست أو سبع سنين وقد يكون أقل من ذلك )

**2) பிரித்தறியும் தன்மை :-** அதாவது ஒரு பிள்ளை ஒருவரின் கேள்வியை விளங்கி, அதற்கு பதில் கொடுக்கும் பருவத்தை அடைந்திருத்தல்.
மேலும் உண்ணுதல், பருகுதல், நஜீஸ்களை விட்டும் தவிர்ந்திருத்தல் போன்ற விடயங்களில் தனித்து செயல்படும் பருவத்தை அடைந்திருத்தல்.
(பிரித்தறியும் தன்மை பெரும் பாலும் ஆறு அல்லது ஏழு வயதில் ஏற்படும். சில வேளை, அதற்கு குறைவான வயதில் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

3. وعدم وجود مانع من وصول الماء إلى المغسول كالبويا والشحم وطلاء الأظافر ( والمناكير )

3) கழுவப்படக்கூடிய உறுப்பிள் தண்ணீரை பட விடாது தடுக்கும் எதுவும் இல்லாமலிருத்தல் :- பெய்ன்ட், கொழுப்பு, நகத்துக்கு பூசும் சாயம் போன்றவை.

4. والسيلان : أي أن يجري الماء بطبعه على العضو المغسول فلو بللت يدك بالماء ومسحت بها وجهك أو يديك في الوضوء فإنه لا يصح وضوءك

4) தண்ணீரை ஓட விடுதல் :- அதாவது கழுவும் உறுப்புக்களில் நீர் அதுவாகவே ஓடுதல். வுழூ செய்யும் போது உனது கையை தண்ணீரில் நனைத்து அதன் மூலம் முகத்தையோ அல்லது இரு கைகளையோ தடவினால் உனது வுழூ ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

5. وأن يكون الماء طاهرا مطهرا: أي غير نجس وغير مستعمل في غسل أو وضوء سابق أوفي إزالة نجس

5) தானும் சுத்தமான ஏனையவற்றையும் சுத்தப்படுத்தக்கூடிய நீராக இருக்க வேண்டும் :- அதாவது நஜீஸ் அல்லாததாக இருத்தல் வேண்டும். குளித்தல், வுழூ செய்தல், நஜீஸை நீக்குதல் போன்றவற்றுக்கு உபயோகிக்கப்படாத நீராக இருத்தல் வேண்டும்.

أسئلة

الدرس : 4 பாடம் : 4

## الاستنجاء
## சுத்தம் செய்தல்

يجب الاستنجاء من خروج رطب نجس من أحد السبلين ( أي القبل أو الدبر ) فإذا خرج من الإنسان بول أو غائط فعليه أن يستنجي قبل الصلاة لتصح صلاته ولا يجب الاستنجاء لخروج الريح

இரு துவாரங்கள் ஒன்றிலிருந்து (முன்துவாரம், பின்துவாரம்) ஈரமான ஒரு நஜீஸ் வெளியாகியதற்காக சுத்தம் செய்வது கட்டாயமாகும்.
ஒரு மனிதரிடமிருந்து சிறுநீர் அல்லது மலம் வெளியாகினால் அவனது தொழுகை நிறைவேற வேண்டுமாயின் தொழுவதற்கு முன்னால் அதனை சுத்தம் செய்வது அவன் மீது கடமையாகும்.
والاستنجاء إما أن يكون بالماء وإما أن يكون بشئ طاهر جامد بقلع النجاسة ( يزيل عينها كالحجر أو الورق ) غير محترم والمحترم كورقة مكتوب عليها علم شرعي
-8

சுத்தம் செய்தல் என்பது : தண்ணீர் மூலமாகவோ அல்லது நஜீஸை கழட்டி எடுக்கக்கூடிய (அதாவது அதனுடைய அடையாளத்தை நீக்கக்கூடிய கல் அல்லது தாள் போன்ற) சுத்தமான தின்னமான சங்கைப் படுத்தப்படாத ஒரு பொருளின் மூலமாகவே மேற்க்கொள்ள முடியும்.
சங்கைப்படுத்தப்பட்ட ஒரு பொருள் என்பது மார்க்க அறிவுகள் எழுதப்பட்ட ஒரு தாளைப் போன்றதாகும்.

والاستنجاء بالماء يكون بصب الماء المطهر على محل النجاسة حتى يطهر المحل
தண்ணீரினால் சுத்தம் செய்வதென்பது நஜீஸ் வெளியாகிய இடம் சுத்தமாகும் வரை, அந்த நஜீஸ் வெளியாகிய இடத்தின் மீது தானும் சுத்தமான பிறரையும் சுத்தப்படுத்தக்கூடிய தண்ணீரை ஊற்றுவதின் மூலம் ஏற்படும்.
وأما الاستنجاء بغير الماء كالحجر فيكون بمسح المخرج ثلاث مسحات حتى ينقى المحل فإن لم ينق المحل زاد على ثلاث مسحات حتى ينقى ولا يكفي أقل من ثلاث مسحات ولوحصل النقاء بمسحتين
தண்ணீர் அல்லாத கல் போன்ற ஒரு பொருளைக் கொண்டு சுத்தம் செய்வதென்பது, நஜீஸ் வெளியாகிய இடம் சுத்தமாகும் வரை மூன்று விடுத்தம் கல்லினால் தடவுவதின் மூலம் ஏற்படும். அவ்வாறும் அவ்விடம் சுத்தமாக வில்லையாயின் அவ்விடம் சுத்தமாகும் வரை மூன்று தடவுதல்களை விட அதிகரிக்க வேண்டும். இரண்டு விடுத்தங்கள் தடவுவதன் மூலம் அந்த இடம்

சுத்தமடைந்தாலும் கூட மூன்று தடவைகள் தடவுவதை விட குறைப்பது போதுமாகமாட்டாது. (சுத்தம் செய்தது நிறைவேறாது)

فائدة : يسن لداخل الخلاء أن يقول عند الدخول :

பிரயோஜனம் தரும் விடயமொன்று.

மலசல கூடத்துக்குள் நுழைபவர் :

بسم الله اللهم إني أعوذ بك من الخبث والخبائث

‘‘பிஸ்மில்லாஹி அழ்ழாஹும்ம இன்னீ அஊது பிக மினல் ஹுபுஸி வல் ஹபாஇஸி’’ என்று நுழையும் போது கூறுவது ஸுன்னத்தாகும்.

وعند الخروج :

மேலும் அதிலிருந்து வெளியேறும் போது

غفرانك الحمدلله الذي أذهب عني الأذى وعافاني

‘‘குப்ரானக அல்ஹம்துலில்லாஹில்லதீ அத்கப அன்னியல் அதா வஆபானீ’’

என்று கூறுவதும் ஸுன்னத்தாகும்.

أسئلة

பாடம் : 5 الدرس : 5

الوضوء : فرائضه وسننه

## வுழூவின் பர்ளுகளும் அதன் ஸுன்னத்களும்

قال الله تعالى :

يأيها الذين ءامنوا إذا قمتم إلى الصلاة فاغسلوا وجوهكم وأيديكم إلى المرافق وامسحوا برأوسكم وأرجلكم إلى الكعبين

سورة المائدة

***அல்லாஹ் தஆலா கூறியுள்ளான் :***

**விளக்கம் :**

***“நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் தொழுகைக்குத் தயாரானால் உங்கள் முகங்களையும், முழங்கைகள் உற்பட உங்கள் கைகளையும் கழுவிக் கொள்ளுங்கள். மேலும், உங்கள் தலைகளை (தண்ணீரை தொட்டுத்) தடவிக் கொள்ளுங்கள். கரண்டைக் கால்கள் உற்பட உங்கள் கால்களையும் கழுவிக்கொள்ளுங்கள்.”***

**(அத்தியாயம் : அல்-மாஇதஹ் வசனம் : 6)**

وأركان الوضوء ستة هي :

வுழூவின் கடமைகள் ஆறு. அவையாவன :

النية بالقلب عند غسل الوجه فيقول بقلبه مثلا نويت الوضوء

1. முகத்தை கழுவும் போது வுழூவின் கடமைகளை நிறைவேற்றுகிறேன் என்று உள்ளத்தால் நிய்யத்து வைத்தல்.

غسل الوجه من منابت شعر الرأس إلى أسفل الذقن ومن الأذن إلى الأذن

2. முகத்தை கழுவுவதென்பது தலை முடி முளைக்க ஆரம்பிக்கும் இடத்தில் இருந்து நாடிக்குழி வரையிலும் ஒரு காதில் இருந்து மற்றைய காது வரையிலும் கழுவதாகும்.

غسل اليدين إلى المرفقين : أي يغسل يديه من رؤوس الأصابع إلى المرفقين والمرفق هو العظم عند ملتقى الساعد والعضد

3. இரு கைகளையும் விரல் நுனியிலிருந்து இரு முழங்கை மூட்டு உட்பட கழுவுதல்.

مسح بعض الرأس

4. தலையின் ஒரு பகுதியை தண்ணீரினால் தடவுதல்.

غسل الرجلين إلى الكعبين أي مع الكعبين والكعبان هما العظمان النائتان عند جانبي القدم

5 இரு கால்களையும் இரு கரண்டைக்கால் உட்பட கழுவுதல். கரண்டைக்கால் என்பது குதிகாலுக்கருகாமையால் வளரக்கூடிய இரண்டு எழும்புகளாகும்.

الترتيب أي أن ينوي عند غسل الوجه ثم يغسل وجهه ثم يديه ثم يمسح بعض رأسه ثم يغسل رجليه

6 மேற்கூறப்பட்டவைகளை ஒழுங்குமுறைப்படி செய்தல். அதாவது முகத்தைக் கழுவும் போது நிய்யத்து வைத்தல். பின்பு முகத்தையும் இரு கைகளையும் கழுவுதல். பின்பு தலையின் ஒரு பகுதியை தண்ணீரினால் தடவுதல் மேலும் இரு கால்களையும் கழுவிக்கொள்ளல்.

ومن سنن الوضوء :

வுழூவின் ஸுன்னத்துக்கள்

1. التسمية أي قول ( بسم الله ) عند البدء

1. வுழூவை ஆரம்பிக்கும் போது பிஸ்மில்லாஹ் சொல்லுதல்.

2. واستعمال السواك

2. மிஸ்வாக் செய்தல்.

3. وغسل الكفين

3. இரு மணிக்கட்டையும் கழுவுதல்.

4. والمضمضة

4. வாய் கொப்பளித்தல்.

5. والاستنشاق

5. நாசிக்கு தண்ணீர் செலுத்துதல்.

6. ومسح جميع الرأس

6. தலை முழுவதையும் தண்ணீரினால் தடவுதல்.

7. ومسح الأذنين ظاهرهما وباطنهما بماء جديد

7. இரு காதுகளின் உற்புரத்தையும், வெளிப்புரத்தையும் (தலையை மஸ்ஹு செய்வதற்கு பாவித்த தண்ணீரல்லாத வேறு) தண்ணீரால் தடவுதல்.

8. وتخليل أصابع اليدين والرجلين

8. இரு கால், கைகளின் விரல்களை குடைந்து கழுவுதல்.

9. وتقديم اليمنى على اليسرى

9. இடதை விட வலதை முற்படுத்தல்.

10. والطهارة ثلاثا ثلاثا

10. மூன்று மூன்று விடுத்தம் கழுவுதல்.

11. والدلك

11. தேய்த்து கழுவுதல்.

12. والموالاة وهي غسل العضو قبل أن يجف العضوالذي قبله

12. தொடர்ச்சியாக செய்தல்.
அதாவது ஒரு உறுப்பு காய்வதற்கு முன்னால் அடுத்த உறுப்பை கழுவுதல்.

13. وتقليل الماء

13. தண்ணீரை குறைத்துக் கொள்ளல்.

أسئلة

பாடம் : 6 الدرس : 6

نواقض الوضوء ومكروهاته

**வுழுவை முறிக்கக்கூடிய விடயங்களும் வுழுவின் போது தவிர்ந்து கொள்ளப்பட்டால் நன்மை தரக்கூடிய விடயங்களும்**

من الأمور التي تنقض الوضوء :

வுழூவை முறிக்கக்கூடிய விடயங்களில் சில :

1. خروج شئ من السبيلين كخروج البول والغائط أو الريح أو الدود

1. சிறுநீர் அல்லது மலம் அல்லது காற்று அல்லது புளு போன்றவைகள் முன், பின் துவாரத்திலிருந்து வெளியாகுதல்.

2. ومس قبل الآدمي أو حلقة دبره

2. ஒரு மனிதனுடைய முன்துவாரத்தை அல்லது மலம் வெளியாகும் இடத்தை தொடுதல்.

3. والنوم على غير هيئة المتمكن ( أي على غير حالة القعود مع إلصاق دبره بمكان جلوسه بحيث لا يبقى تجاف بينها وبين مكان جلوسه ) أما النعاس فلا ينقض الوضوء والنعاس هو الذي يسمع فيه الكلام لكن لا يفهم ولا ترى فيه رؤيا

3. காற்று வெளியாக இடம்பாடு உள்ள ஒரு அமைப்பில் தூங்குதல். (காற்று வெளியாக இடம்பாடில்லாத அமைப்பில் தூங்குவதென்பது, தான் உட்காரும் இடத்திற்கும், தனது பித்தட்டுக்கும் இடையில் இடைவெளி எதுவும் இல்லாது தனது பித்தட்டை உட்காரும் இடத்தில் நன்கு பதித்து உட்காரும் அமைப்பில் தூங்குவதாகும்,) சிறுதூக்கமென்பது அருகில் பேசப்படுவதை கேட்க முடியும். ஆனாலும் அதை புரிந்து கொள்ளமுடியாது. மேலும் சிறுதூக்கத்தில் கனவும் காணவும் முடியாது.

4. وزال العقل فمن غاب عقله بالجنون أو الإغماء انتقض وضوءه

4. சுயபுத்தி நீங்குதல். எவருடைய சுயபுத்தி, பைத்தியம் அல்லது மயக்கத்தின் காரணமாக நீங்கிவிடுகின்றதோ அவருடைய வுழூ முறிந்து விடும்.

من مكروهات الوضوء :

வுழூவின் போது தவிர்ந்து கொள்ளப்பட்டால் நன்மை தரக்கூடிய விடயங்கள்.

تقديم اليسرى على اليمنى

வலதை விட இடதை முற்படுத்துதல்.

والزيادة على الثلاث في الغسل

(ஒரு உறுப்பை) கழுவும் போது மூன்று விடுத்தத்தை விடவும் அதிகரித்தல்.

والإسراف في الماء

தண்ணீரை வீண்விரயம் செய்தல்.

والكلام الذي لا خير فيه أثناء الوضوء

வுழூ செய்துகொண்டிருக்கையில், நலவுகள் அல்லாத வார்த்தைகளைப் பேசுதல்.

وترك التسمية

1. பிஸ்மில்லாஹ் சொல்லுவதை விடுதல்.

أسئلة

பாடம் : 7 الدرس : 7

## الأذان والإقامة
## அதானும் இகாமத்தும்

إذا دخل وقت الصلاة يسن أن يقوم أحد المسلمين بالدعوة إلى أدائها بصوت مرتفع وهذا يسمى الأذان يقف المؤذن متطهرا في مكان مرتفع متوجها إلى القبلة ويقول :

தொழுகையுடைய நேரம் நுழைந்துவிட்டால் முஸ்லிம்களில் ஒருவர் தொழுகையை நிறைவேற்ற தயாராகுமாறு உயர்ந்த சத்தத்துடன் அழைப்பை மேற்கொள்வது ஸுன்னத்தாகும். அதற்கு அதான் (பாங்கு) என்று சொல்லப்படும். அதான் சொல்பவர் (தொடக்குகளை விட்டும் மற்றும் நஜிஸ்களை விட்டும்) சுத்தமானவராக உயர்வான ஒரு இடத்தில் நின்று கிப்லஹ்வை முன்னோக்கி பின்வருமாறு

الله أكبر الله أكبر الله أكبر الله أكبر
أشهد أن لا إله إلا الله  أشهد أن لا إله إلا الله
أشهد أن محمدا رسول الله أشهد أن محمدا رسول الله
حي على الصلاة حي على الصلاة
حي على الفلاح  حي على الفلاح
الله أكبر الله أكبر لا إله إلا الله

கூறுவார்.

وفي أذان الصبح يزيد المؤذن بعد قوله : حي على الفلاح  الثانية : الصلاة خير من النوم الصلاة خير من النوم

ஸுப்ஹுத் தொழுகையுடைய அதானிலே இரண்டாவது ''ஹய்ய அலல் பலாஹ்'' என்று கூறியதன் பின்னால் ''அஸ்ஸலாது ஹைரும் மின ன் நவ்ம்'' என்ற வார்த்தையை முஅத்தின் அதிகரித்துக் கொள்வார்.

ويسن للمستمعين أن يرددوا وراء المؤذن مثلما يقول
ولكن حين يقول : حي على الصلاة حي على الصلاة يقولون لا حول ولا قوة إلا بالله

அதானை செவிமடுப்பவர்கள் முஅத்தின் சொன்னதைப் போன்று சொல்லிக் கொள்வது ஸுன்னத்தாகும்.
என்றாலும் ''ஹய்ய அலஸ் ஸலாஹ்'' ''ஹய்ய அலல் பலாஹ்'' என்று சொல்லும் போது ''லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்'' என்று சொல்லிக் கொள்வது ஸுன்னத்தாகும்.

## الإقامة
## இகாமத்

بعد أن ينتهي المؤذن من الأذان ويجتمع الناس لتأدية الصلاة المفروضة يتولى أحدهم إقامة الصلاة فيقول :
முஅத்தின் அதான் சொல்லி முடித்து மனிதர்கள் பர்ளான தொழுகையை நிறைவேற்றுவதற்காக ஒன்று கூடியதன் பின்பு அவர்களில் ஒருவர் இகாமத் கூற முன்வந்து பின்வறுமாறு சொல்லுவார்.

الله أكبر الله أكبر
أشهد أن لا إله إلا الله
أشهد أن محمدا رسول الله
حي على الصلاة حي على الفلاح
قد قامت الصلاة قد قامت الصلاة
الله أكبر الله أكبر لا إله إلا الله

ويسن بعد الأذان والإقامة الصلاة على النبي ﷺ

மேலும் அதான், இகாமத் சொல்லி முடித்ததன் பின்னால் முஹம்மத் ﷺ அவர்கள் மீது ஸலவாத்து சொல்லுவது ஸுன்னத்தாகும்.

أسئلة

பாடம் : 8 الدرس : 8

الصلوات المفروضة وأوقاتها

**கடமையாக்கப்பட்ட தொழுகைகளும் அதன் நேரங்களும்**

الصلوات المفروضة في كل يوم وليلة خمس هي :

ஒவ்வொரு நாளும் நிறைவேற்றவேண்டிய கடமையான தொழுகைகள் ஐந்தாகும்.

அவைகள் பின்வருமாறு :-

1. الصبح

1. ஸுப்ஹு

2. والظهر

2. ழுஹ்ரு

3. والعصر

3. அஸ்ரு

4. والمغرب

4. ம.்.ரிப்

5. والعشاء

5. இஷா

وأوقات هذه الصلوات هي :

இந்த ஐந்து தொழுகைகளின் நேரங்கள் பின்வருமாறு :

الصبح : ويبدأ وقتها من طلوع الفجر الصادق وهو بياض يظهر في عرض الأفق الشرقي وينتهي بطلوع الشمس

**1. ஸுப்ஹு தொழுகை :**

உண்மையான பஜ்ரு உதயமானதிலிருந்து அதனுடைய நேரம் ஆரம்பம் ஆகும்.
உண்மையான பஜ்ரு உதயமென்பது கிழக்கு அடி வானத்திலே பரவலாக வெளிப்படக்கூடிய வெள்ளை ஒளியாகும். சூரியன் உதயமாகுவதின் மூலம் ஸுப்ஹுடைய நேரம் முடிவடையும்.

الظهر: ويبدأ وقتها إذا مالت الشمس عن وسط السماء إلى جهة المغرب وينتهي بدخول وقت العصر

2. ழுஹ்ரு தொழுகை :

நடு வானத்திலிருந்து மேற்க்குத்திசையின் பக்கமாக சூரியன் சாய்வதிலிருந்து அதாவது விலகுவதிலிருந்து அதனுடைய நேரம் ஆரம்பித்து அஸ்ருடைய நேரம் நுழைவது கொண்டு முடிவடையும்.

العصر : ويبدأ وقتها إذا صار ظل الشئ مثله زائدا على ظله لما كانت الشمس في وسط السماء ( وهو ظل الاستواء ) وينتهي بدخول وقت المغرب

3. அஸ்ரு தொழுகை :
ஒரு பொருளினுடைய நிழல் அப்பொருள் போன்ற அளவை அடைந்து, நடுவானிலே சூரியன் தரிபட்டிருக்கும் போது காணப்படும் நிழலை விட சற்று அதிகரித்தால் அஸ்ருடைய நேரம் ஆரம்பிக்கும். ம.ஃ.ரிபுடைய நேரம் நுழைவதின் மூலமாக முடிவடையும்.

المغرب : ويبدأ وقتها من مغيب الشمس وينتهي بدخول وقت العشاء

4. ம.ஃ.ரிப் தொழுகை :
சூரியன் மறைந்ததிலிருந்து அதனுடைய நேரம் ஆரம்பிக்கும். இஷாவுடைய நேரம் நுழைவதுடன் அது நிறைவடையும்.

والعشاء : ويبدأ وقتها من مغيب الشفق الأحمر وينتهي بدخول وقت الصبح

5. இஷா தொழுகை :
செம்மேகம் மறைந்ததிலிருந்து அதனுடைய நேரம் ஆரம்பமாகும். பஜ்ர் உதயமாகுவதின் மூலம் முடிவடையும்.

فيجب أداء هذه الصلوات في أوقاتها ولا يجوز تقديمها أوتأخيرها عن وقتها إلا لعذر

இந்த தொழுகைகளை அதனுடைய நேரங்களில் நிறைவேற்றுவது கட்டாயமாகும்.
மார்க்கம் அனுமதித்த எக்காரணமுமின்றி நேரங்களை விட்டும் இத்தொழுகைகளை முற்படுத்துவதும் கூடாது, பிற்படுத்துவதும் கூடாது.

أسئلة

الدرس : 9 பாடம் : 9

**شروط صحة الصلاة**

## தொழுகை நிறைவேறுவதற்குரிய நிபந்தனைகள் சில உள்ளன

شروط صحة الصلاة هي الأمور التي يجب توفرها في المصلي قبل الشروع في الصلاة ومنها :

தொழுகை நிறைவேறுவதற்குரிய நிபந்தனைகள்
தொழுகையை ஆரம்பிக்க முன்பு தொழக்கூடியவரிலே கட்டாயம் முழுமையடைந்திருக்க வேண்டிய விடயங்களாகும்.

الإسلام : فلا تصح الصلاة من كافر

1. முஸ்லிமாக இருத்தல் வேண்டும் : ஒரு காபிரடமிருந்து தொழுகை நிறைவேறமாட்டாது.

التمييز : وهو أن يكون الولد وصل إلى سن بحيث يفهم الخطاب ويرد الجواب

2. பகுத்தறிவு கொண்டவனாக இருத்தல் வேண்டும் : அதாவது ஒரு பிள்ளை ஒரு கேள்வியை விளங்கி அதற்கு தகுந்த பதிலளிக்கக்கூடிய பருவத்தை அடைந்திருத்தலாகும்.

والوضوء : أي لا بد أن يكون الشخص متوضئا وإلا فلا تصح صلاته

3. வுழு செய்திருத்தல் வேண்டும் : வுழு செய்யவில்லையாயின் அவரது தொழுகை நிறைவேறமாட்டாது.

وطهارة ثياب المصلي وجسمه والمكان الذي يصلي فيه من النجاسة التي لا يعفى عنها

4. தொழுபவரின் உடல், உடை, தொழும் இடம் ஆகியன மன்னிக்கப்படாத நஜீஸை விட்டும் சுத்தமாக இருத்தல் வேண்டும்.

وستر العورة : أي أن يستر الرجل من السرة إلى الركبة أما المرأة الحرة فعليها أن تستر جميع بدنها ما عدا وجهها وكفيها

5. அவ்றத்தை மறைத்தல் வேண்டும் : அதாவது ஒரு ஆண் அவனுடைய முழங்காலுக்கும், தொப்புளுக்கும் இடைப்பட்ட பகுதியை

மறைத்திருக்க வேண்டும். ஒரு சுதந்திரமான பெண் அவளுடைய முகம், இரு மணிக்கட்டுகள் தவிர்ந்த முழு உடலையும் மறைத்திருக்க வேண்டும்.

والعلم بدخول وقت الصلاة : أي أن يعرف المصلي أن وقت الصلاة قد دخل

6. தொழுகையுடைய நேரம் நுழைந்ததை அறிந்திருத்தல் வேண்டும் : அதாவது தொழுபவர், தொழுகையின் நேரம் நுழைந்ததை அறிந்திருத்தல் வேண்டும்.

واستقبال القبلة : أي الكعبة المشرفة التي في مكة المكرمة

7. கிப்லாவை முன்னோக்குதல் வேண்டும் : அதாவது புனித மக்காவிலே உள்ள சங்கையான கிப்லாவை முன்னோக்குதல் வேண்டும்.

أسئلة

பாடம் : 10 الدرس : 10

## أركان الصلاة

## தொழுகையுடைய ருகுன்கள்

الصلاة لها أركان وسنن فالأركان لا تصح الصلاة بدونها وأما السنن إذا تركها الشحص فتصح صلاته لكن يفوته ثوابها

தொழுகைக்கு ருகுன்களும் ஸுன்னத்களும் உள்ளன.

ருகுன்கள் என்பது : அவைகளின்றி தொழுகை நிறைவேறமாட்டாது.

ஸுன்னத்கள் என்பது : அவைகளை செய்யாமல் விட்டாலும் தொழுகை நிறைவேறும், என்றாலும் அதை விட்டவருக்கு அதன் நன்மை தப்பிப் போய்விடும்.

وأركان الصلاة سبعة عشر ركنا هي :

தொழுகையின் ருகுன்கள் பதினேழாகும்.

அவையாவன

النية : وهي أن ينوي بقلبه أنه يصلي فرض الظهر مثلا مع التكبير فيقول بقلبه أصلي فرض الظهر

1. நிய்யத் வைத்தல் வேண்டும். அதாவது ஆரம்ப தக்பீர் கூறும் வேளை ழுஹ்ருடைய பர்ளை தொழுவதாக தன் உள்ளத்தினால் எண்ணம் கொள்ளவேண்டும். ‘‘நான் ழுஹ்ருடைய பர்ளைத் தொழுகின்றேன்’’ என உள்ளத்தால் கூறவேண்டும்.

وتكبيرة الإحرام : وهي التكبيرة الأولى في الصلاة فيقول بحيث يسمع نفسه : الله أكبر

2. இஹ்ராம் தக்பீர் சொல்லுதல் வேண்டும் : இது தொழுகையின் முதல் தக்பீராகும். ‘‘அழ்ழாஹு அக்பர்’’ என்று தனக்கு கேற்கும் விதத்தில் மொழிதல் வேண்டும் :

والقيام في الفرض للقادر : أي أنه يشترط القيام في صلاة الفرض للقادر

3. நின்று தொழ சக்தியுள்ளவர், பர்ளான தொழுகையில் நின்று தொழுதல் வேண்டும்.

وقرءاة الفاتحة بالبسملة والتشديدات : وتجب موالاتها وإخراج الحروف من مخارجها

4. சூறதுல் பாதிஹாவை அதிலுள்ள ஷத்துகளை கவனிப்பதோடும், பிஸ்மிழ்ழாஹ் கூறுவதுடனும் ஓதுதல் வேண்டும். அதை இடைவிடாது தொடர்ச்சியாக ஓதுவதுடன் அதன் எழுத்துகளை அவை வெளியாகும் இடங்களிலிருந்து வெளியாக்குவதும் அவசியமாகும்.

والركوع : بأن ينحني بحيث تنال راحتاه ركبتيه

5. ருகூஉ செய்தல் வேண்டும் : இரு உள்ளங்கைகளும், இரு முழங்கால்களை தொடுகின்ற விதத்தில் ருகூஉ அமைய வேண்டும்.

والطمأنينة فيه : بقدر سبحان الله وهي سكون الأعضاء دفعة واحدة

6. அதிலே தாமதித்தல் வேண்டும். அதாவது ஒரே விடுத்தமாக உடல் உறுப்புகளனைத்தும் ‘‘ஸுப்ஹானழ்ழாஹ்’’ என்று சொல்லுமளவுக்கு அமைதி பெற்றிருத்தல் வேண்டும்.

والاعتدال : بأن ينتصب بعد الركوع قائما

7. நிலைக்கு வருதல் வேண்டும்.

والطمأنينة فيه

8. (மேற்குறித்த விதத்தில்) அதிலே தாமதித்தல் வேண்டும்.

والسجود مرتين : والسجود يكون على سبعة أعظم فيضع شيئا من الجبهة مكشوفا فشيئا من الركبتين ومن بطون الكفين ومن بطون أصابع الرجلين

9. இரு தடவை ஸுஜூத் செய்தல் வேண்டும்.
ஸுஜூத் ஏழு உறுப்புக்கள் மீது ஆகியிருத்தல் வேண்டும்.
திறக்கப்பட்ட நிலையில் நெற்றியின் ஒரு பகுதியையும், இரு முட்டுக்கால்களின் ஒரு பகுதியையும், இரு உள்ளங்கைகளின் ஒரு பகுதியையும், இரு கால் விரல்களின் உற்புரத்தின் ஒரு பகுதியையும் நிலத்தில் வைக்க வேண்டும்.

والطمأنينة فيه

10.(மேற்குறித்த விதத்தில்) அதிலே தாமதித்தல் வேண்டும்.

والجلوس بين السجدتين

11. இரு ஸுஜூதுகளுக்கு மத்தியில் அமர்தல் வேண்டும்.

والطمأنينة فيه

12. (மேற்குறித்த விதத்தில்) அதிலே தாமதித்தல் வேண்டும்.

والجلوس الأخير : أي للتشهد الأخير وما بعده

13.இறுதி அத்தஹிய்யாத்தையும் அதன் பின்னால் ஓதப்படவேண்டிய ஸலவாத்தையும் ஓதுவதற்காக அமர்தல் வேண்டும்.

والتشهد الأخير :

14.இறுதி அத்தஹிய்யாத் ஓதுதல் வேண்டும்.

وأقله

அதன் குறைந்த அளவு

التحيات لله سلام عليك أيها النبي ورحمة الله وبركاته سلام علينا وعلى عباد الله الصالحين
أشهد أن لا إله إلا الله وأن محمدا رسول الله

என்று ஓதுவதாகும்.

وأكمله

அதன் பரிபூரண அளவு

التحيات المباركات الصلوات الطيبات لله السلام عليك أيها النبي ورحمة الله وبركاته السلام علينا وعلى عباد الله الصالحين أشهد أن لا إله إلا الله وأشهد أن محمدا رسول الله

என்று ஓதுவதாகும்.

والصلاة على النبي وأقلها اللهم صل على محمد

15.முஹம்மத் ﷺ அவர்கள் மீது ஸலவாத் ஓதுதல் வேண்டும்.
அதன் குறைந்த அளவு “அழ்ழாஹுஉம்ம ஸல்லி அலா முஹம்மத்” என்று ஓதுவதாகும்.

السلام : وأقله السلام عليكم

16.ஸலாம் கூறுதல் வேண்டும்.
அதன் குறைந்த அளவு “அஸ்ஸலாமு அலைக்கும்” என்பதாகும்.

والترتيب : ( أي ما ذكر ) فلو سجد قبل ركوعه عمدا بطلت صلاته

17. மேற்கூறப்பட்ட ருகுன்களை ஒழுங்கு முறைப்படி செய்தல் வேண்டும்.
உதாரணமாக ருகூஉ செய்ய முன்பு வேனுமென்று ஸுஜூத் செய்தால் தொழுகை முறிந்து விடும்.

## شرح بعض ألفاظ الصلاة

## தொழுகையில் ஓதப்படும் சில வார்த்தைகளின் விளக்கம்

الله أكبر : معناه أن الله أكبرمن كبير قدرا وعظمة لا حجما لأن الله منزه عن الحجم

“அழ்ழாஹு அக்பர்” என்பதன் விளக்கம் :
அழ்ழாஹ் அந்தஸ்தால், மகத்துவத்தால் எல்லாவற்றையும் விட மிகப் பெரியவன். மாறாக உடலால் அல்லது பருமனால் பெரியவன் அல்ல. ஏனெனில் அழ்ழாஹ், பெருமானம் பெறுவதை விட்டும் தூய்மையானவன்.

التحيات : معناه ما يحي به العباد بعضهم بعضا

“அத்தஹிய்யாத்” என்பதன் விளக்கம் :
அடியார்களில் சிலர் சிலருக்கு கூறும் காணிக்கையாகும்.

المباركات : الأعمال النامية في الخير

‘‘அல்-முபாரகாத்’’ என்பதன் விளக்கம் :
நலவைப் பொருந்திய அமல்கள்.

وأما الصلوات : فهي الصلوات الخمس

‘‘அஸ்ஸலவாத்’’ என்பதன் விளக்கம் : ஐந்து நேரத் தொழுகைகள் ஆகும்.

وأما الطيبات : فمعناه الأعمال الصالحة أي أن كل ذلك ملك لله تعالى

‘‘அத்தய்யிபாத்’’ என்பதன் விளக்கம் :
ஸாலிஹான அமல்களாகும்.
மேற்குறித்த அனைத்தும் அல்லாஹ்வுக்குரியதாகும்.

وأما السلام عليك أيها النبي فمعناه السلامة من الآفات

‘‘அஸ்ஸலாமு அலைக அய்யுஹன் நபிய்யு’’ என்பதன் விளக்கம் : தன் உம்மத்தின் மீது அவர்கள் பயப்படக்கூடிய ஆபத்துகளிலிருந்து அவர்களை அச்சம் தீரச்செய்வாயாக

سبحان ربي الأعلى: معناه أنزه ربي الأعلى أي علو قدر من كل نقص وعيب كالمكان والجهة والعجز والجهل والتغير

‘‘ஸுப்ஹான றப்பியல் அ.்.லா’’ என்பதன் விளக்கம் :
மகத்துவமிக்க எனது றப்பாகிய அல்லாஹ்வை மடமை, இயலாமை, இடம் எடுத்தல், திசை பெறுதல், மாற்றமடைதல் போன்ற அனைத்துக் குறைபாடுகளை விட்டும் பரிசுத்தப்படுத்துகின்றேன்.

أسئلة

பாடம் : 11 — الدرس : 11

## سنن الصلاة
## தொழுகையின் ஸுன்னத்கள்

سنن الصلاة كثيرة من تركها صحت صلاته ولكن من فعلها فله ثواب وأجر عند الله فينبغي للمصلي أن يحافظ عليها ومن هذه السنن :

தொழுகையின் ஸுன்னத்கள் அதிகம் உள்ளன.
யாராவது இவைகளை விட்டால் தொழுகை நிறைவேறும். என்றாலும் யார் இவற்றை செய்வாரோ அவருக்கு அல்லாஹ்வினால் பல

நன்மைகள் கூலிகள் வழங்கப்படும். தொழுபவர் அந்த ஸுன்னத்துகளைப் பேணி செய்து வருவது அவசியமாகும்.
அந்த ஸுன்னத்துகளில் சில :

1. وضع اليد اليمنى على كوع اليسرى فوق السرة وتحت الصدر

1. தொப்புளுக்கு மேலாகவும் நெஞ்சுக்கு கீழாகவும் இருக்கும் அமைப்பில் இடது கையின் மணிக்கட்டின் மீது வலது கையை வைத்தல்.

2. وقرءاة دعاء الافتتاح قبل قرءاة الفاتحة في الركعة الأولى

2. முதலாவது ரக்அத்தில் பாதிஹாவை ஓதுவதற்கு முன்னால் துஆஉல் இப்திதாஹ்வை (வஜ்ஜஹ்துவை) ஓதுதல்.

وقرءاة سورة قصيرة بعد قرءاة الفاتحة في الركعتين الأولى والثانية ( لغير المأموم في الصلاة الجهرية )

3 . இமாம் பிறருக்கு கேட்கும் விதத்தில் ஓதும் தொழுகையில், ம:ஃமூம் அல்லாத அனைவரும் தமது தொழுகைகளில், முதலாவது ரக்அத்திலும், இரண்டாவது ரக்அத்திலும், பாதிஹாவிற்கு பின்னால் சிறிய அத்தியாயத்தை ஓதுவது ஸுன்னத்தாகும்.

4 والتكبيرات ( أي قول الله أكبر ) عند الانتقال من ركن فعلي إلى ركن ءاخر إلا عند الرفع من الركوع فيقول سمع الله لمن حمده أما تكبيرة الإحرام فإنها ركن

3. ஒரு செயல் சார்ந்த ருகுனிலிருந்து இன்னொரு ருகுனுக்கு நகரும் நேரத்தில் ‘‘அல்லாஹு அக்பர்’’ என்று சொல்லல். ஆனால் ருகூவில் இருந்து நிலைக்கு எழும்பும் நேரத்தில் மாத்திரம் ‘‘ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ்’’ என்று சொல்லல். ஆனால் ஆரம்ப தக்பீர் (இஹ்றாம் தக்பீர்) சொல்வது பர்ளாகும்.

4. وقول سبحان ربي العظيم ثلاث مرات في الركوع

5 ருகூவிலே ‘‘ஸுப்ஹான றப்பியல் அழீம்’’ என்று மூன்று முறை ஓதுதல்.

6 وقول سمع الله لمن حمده في الرفع من الركوع

5. ருகூவிருந்து எழும்பும் போது ‘‘ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ்’’ என்று ஓதுதல்.

7 وقول ربنا ولك الحمد في الاعتدال

6. நிலையிலே ‘‘றப்பனா வலகல் ஹம்து’’ என்று ஓதுதல்.

7. وقول سبحان ربي الأعلى ثلاث مرات في السجود

8 ஸுஜூதிலே ‘‘ஸுப்ஹான றப்பியல் அ.்.லா’’ என்று மூன்று முறை ஓதுதல்.

9 وقول اللهم اغفر لي وارحمني واهدني وعافني وارزقني في الجلوس بين السجدتين

8. இரு ஸுஜூதுக்கு இடையில் அமரும் போது ‘‘அழ்ழாஹுஹும்ம.்.பிர்லீ வர்ஹம்னீ வஹ்தினீ வஆபினீ வர்ஸுக்னீ’’ என்று ஓதுதல்.

9. والتشهد الأول ( أي بعد إتمام الركعتين الأولين ) في صلاة الظهر والعصر والمغرب والعشاء

10 இஷா, அஸ்ர், மஹ்ரிப், ழுஹ்ர் ஆகிய தொழுகைகளில் முதல் இரு ரக்அத்துக்களை தொழுத பின். முதலாவது அத்தஹிய்யாத் ஓதுதல்.

11 وقرءاة الصلاة الإبراهيمية بأكملها بعد التشهد الأخير

10. இறுதி அத்தஹிய்யாத்திற்கு பிறகு ஸலவாதுல் இப்ராஹீமிய்யஹ்வை பரிபூரணமாக ஓதுதல்.

11. وزيادة ورحمة الله في السلام فيقول السلام عليكم ورحمة الله

12 ஸலாம் சொல்லும் போது ‘‘அஸ்ஸலாமு அலைக்கும்’’ என்று பரிபூரணமாக சொல்லுதல்.

13 والتسليمة الثانية

12. இரண்டாவது ஸலாம் சொல்லுதல்.

13. والالتفات إلى اليمين في التسليمة الأولى وإلى اليسار في التسليمة الثانية

14 முதலாவது ஸலாமின் போது வலது பக்கமும் இரண்டாவது ஸலாமின் போது இடது பக்கமும் திரும்புதல்.

أسئلة

பாடம் : 12 الدرس : 12

## مبطلات الصلاة
## தொழுகையை முறிக்கக்கூடியவைகள்

هناك أمور تبطل الصلاة لا بد من معرفتها لاجتنابها
من هذه المبطلات

தொழுகையை முறித்து விடக்கூடிய சில விடயங்கள் உள்ளன. இவைகளை தவிர்ந்து கொள்வதற்காக இவைகளைப் பற்றி அறிந்திருப்பது அவசியமாகும்.
தொழுகையை முறிக்கும் சில விடயங்கள் :

1. الكلام العمد : أي إذا يتكلم المصلي بكلام الناس بحرف مفهم أو بأكثر عامدا ذاكرا أنه في الصلاة بطلت صلاته أما ذكر الله فلا تبطل الصلاة

1. வேனுமென்று பேசுதல். அதாவது தொழக்கூடியவர் தான் தொழுகையிலே இருப்பதை அறிந்தவனாக (அல்-குர்ஆன், திக்ர் அல்லாத) மனிதன் பேசும் பேச்சில் ஒரு கருத்தை விளக்கும் ஒரு எழுத்தைக் கொண்டு அல்லது பல எழுத்தைக் கொண்டு வேண்டுமென்று ஒருவர் பேசினால் அவருடைய தொழுகை முறிந்து விடும். என்றாலும் தொழுவதை மறந்து குறைவாகப் பேசினால் அவருடைய தொழுகை முறிந்து விடாது.

2. والأكل والشرب : فإذا أكل المصلي أو شرب عامدا ذاكرا أنه في الصلاة ولو كان قليلا كحبة سمسم بطلت صلاته

2. குடித்தல், சாப்பிடுதல்.
தொழுபவர் தொழுகையில் இருப்பதை நினைவில் வைத்துக் கொண்டு சாப்பிட்டால் அல்லது பருகினால் அது எள்ளைப் போன்று குறைவாக இருந்தாலும் அவனுடைய தொழுகை முறிந்து விடும்.

3. والأفعال الكثيرة : فمن فعل أفعالا كثيرة كأن تحرك ثلاث حركات متواليات فإنه تبطل صلاته

3. அதிகமான செயல்கள்.
யார் அதிக செயல்களை செய்வாரோ உதாரணமாக தொடர்ச்சியாக மூன்று அசைவுகளை செய்வாரோ அவரது தொழுகை முறிந்து விடும்.

4. والحركة المفرطة : كالوثبة الفاحشة

4. வரம்பு மீறிய ஒரு அசைவு.
உதாரணம் : கடுமையான பாய்ச்சல்.

5. والحركة الواحدة للعب : كتحريك اللسان أو الجفن بقصد اللعب

5. விளையாட்டுக்காக செய்யப்படும் ஒரு அசைவு.
உதாரணம் : நாவை அல்லது கண் இமையை விளையாட்டு நோக்கத்தில் அசைத்தல்.

6. وزيادة ركن : كأن سجد ثلاث مرات في الركعة الواحدة عمدا

6. மேலதிகமாக ருகுனொன்றை அதிகரித்தல்.
உதாரணம் : முதலாவது ரக்அத்திலே வேனுமென்று மூன்று தடவை ஸுஜூத் செய்வதைப் போன்று.

7. تغيير النية : فإذا نوى قطع الصلاة أو تردد في قطعها أو علق قطعها على شئ كأن قال في نفسه إن قرع الباب أقطع الصلاة بطلت في الحال

7. நிய்யத்தை மாற்றுதல்.
ஒருவர் தொழுகையை இடைநிறுத்த நிய்யத் வைத்தாலோ அல்லது அதனை இடைநிறுத்தும் விடயத்தில் தடுமாறினாலோ அல்லது அதை நிறுத்துவதை வேறொரு விடயத்தின் மீது சம்பந்தப்படுத்தினாலோ உதாரணமாக கதவு தட்டப்பட்டால் நான் தொழுகையை இடைநிறுத்துவேன் என்று தனக்குள் எண்ணிக்கொண்டிருப்பது போல. இந்த நிலமைகள் அனைத்திலும் தொழுகை உடனடியாக முறிந்துவிடும்

8. والحدث : كخروج الريح

8. தொடக்கு ஏற்படுதல்.
உதாரணம் : காற்று வெளியாகுதல்.

أسئلة

பாடம் : 13 الدرس : 13

## الصلاة السرية والصلاة الجهرية

## தனக்கு மாத்திரம் பிறருக்கு கேட்கும் விதத்தில் ஓதும் தொழுகையும் கேட்கும் விதத்தில் ஓதும் தொழுகை

الصلوات الجهرية : الصبح والمغرب والعشاء

(இமாமினால் சத்தமிட்டு ஓதப்படும்) ஜஹ்ரிய்யத்தான தொழுகைகளாவன

1. ஸுப்ஹ்
2. ம.்.ரிப்
3. இஷா

ஆகியனவாகும்.

ويجهر فيها الركعتين الأوليين في القيام في قرءاة الفاتحة والتأمين وما بعدها كالسورة القصيرة هذا للمنفرد والإمام

ஜஹ்ரிய்யத்தான தொழுகையில் ஆரம்ப இரு ரக்அத்தின் நிலையிலே சூறதுல் பாதிஹாவையும், ஆமீன் கூறுவதையும், இவை இரண்டிற்குப் பின்னால் ஓதப்படும் சிறிய சூறாவைப் போன்றதையும் பிறர் கேட்கும் விதத்தில் ஓதுவார். இந்த சட்டம் இமாமிற்கும், தனியாக தொழுபவருக்குமானதாகும்.

الصلاتان السريتان : الظهر والعصر

(இமாமினால் பிறருக்கு கேட்காக விதத்தில் ஓதப்படும்) ஸிர்ரியத்தான தொழுகைகளாவன

1. ழுஹ்ர்
2. அஸ்ர்

ஆகியனவாகும்.

ومن فاتته صلاة من هذه الصلوات يقضيها فإن كانت جهرية قضاها في وقت صلاة سرية يسربها كأن قضى الصبح في وقت الظهر أما إن قضاها في وقت صلاة جهرية جهر بها كأن قضى المغرب في وقت العشاء

மேற்குறித்த தொழுகைகளில் ஏதெனும் ஒரு தொழுகை ஒருவருக்கு தப்பிவிடுமானால் அதை அவர் தொழுதே ஆக வேண்டும். ஒருவர் (பிறருக்கு கேட்கும் விதத்தில் ஓதப்படும்) ஜஹ்ரிய்யத்தான தொழுகையை (தனக்கு மாத்திரம் கேட்கும் விதத்தில் ஓதப்படும்)

ஸிர்ரிய்யத்தான தொழுகையின் நேரத்திலே கழா செய்தால் அவர் அந்த தொழுகையில் உள்ளவைகளை தனக்கு மாத்திரம் கேட்கும் விதத்தில் ஓதுவார்.
உதாரணமாக ஸுப்ஹுத் தொழுகையை ழுஹ்ர் தொழுகையின் நேரத்தில் கழா செய்தல்.
ஒருவர் தப்பிவிட்ட ஜஹ்ரிய்யத்தான தொழுகையை ஜஹ்ரிய்யத்தான தொழுகையின் நேர்த்தில் கழா செய்தால் அந்த தொழுகையில் உள்ள அனைத்தையும் ஜஹ்ராக ஓதுவார்.
உதாரணமாக ம.ஃ.ரிப் தொழுகையை இஷாத் தொழுகையின் நேரத்தில் கழா செய்தல்.

وإن قضى السرية في وقت الجهرية يجهر كأن قضى العصر في وقت المغرب

ஒருவர் (தப்பிவிட்ட) ஸிர்ரிய்யத்தான தொழுகையை ஜஹ்ரிய்யத்தான நேரத்தில் தொழுதால் அவர் அந்த தொழுகையில் உள்ள அனைத்தையும் ஜஹ்ராக ஓதுவார்.
உதாரணம் : அஸ்ர் தொழுகையை ம.ஃ.ரிப் தொழுகையின் நேரத்தில் கழா செய்தல்.

فائدة : إذا سمع المأموم الإمام في الصلاةالجهرية يقرأ :
اليس الله بأحكم الحاكمين
سورة التين
يقول المأموم بلى وأنا على ذلك من الشاهدين

பயன் தரும் விடயமொன்று
ஒரு ம.ஃ.மூம், ஜஹ்ரிய்யத்தான தொழுகையிலே இமாம் (أليس الله بأحكم الحاكمين) என்ற வசனத்தை ஓதுவதை செவியுற்றால் அந்த ம.ஃ.மூம்
(بَلَى وَأَنَا عَلَى ذَلِكَ مِنَ الشَّاهِدِيْنَ) என்று ஓதுவார்.

وإن كان يقرأ الفاتحة يقول : بلى
ثم يكمل الفاتحة وإذا انتهى الإمام من قرءاة الفاتحة يقول المأموم : ءامين مع الإمام

அல்லது அந்த ம.ஃ.மூம் சூறதுல் பாதிஹாவை ஓதிக் கொண்டிருக்கும் போது இமாம் இவ்வாறு ஓதுவதை கேட்டால் அந்த நிலையில் ம.ஃ.மூம் (بَلَى) என்று மட்டும் கூறிவிட்டு, சூறதுல் பாதிஹாவை பரிபூரணப் படுத்துவார். இமாம் சூறதுல் பாதிஹாவை ஓதி முடித்தால் ம.ஃ.மூம் இமாமுடன் சேர்ந்து ஆமீன் சொல்வார்.

وإذا سمع ءاية فيها اسم النبي ﷺ فيصلي عليه كأن يقول : اللهم صل عليه

பெருமானாரின் ﷺ பெயர் கூறப்படும் வசனம் ஒன்றை ம.்.மும் செவியுற்றால் பின்வருமாறு ஸலவாத் ‘‘அழ்ழாஹுஃம்ம ஸல்லி அலா முஹம்மத்’’ கூறுவார்.

أما لو سلم عليه رجل وهو يصلى فلا يقول له وعليكم السلام فإن قال له ذلك فسدت صلاته وكذلك إذا قال للعاطس يرحمك الله

ஒருவர் தொழுதுகொண்டிருக்கும் ஒருவருக்கு ஸலாம் கூறினால், தொழுதுகொண்டிருப்பவர் ‘‘வஅலைக்குமுஸ்ஸலாம்’’என்று கூறக்கூடாது. அவ்வாறு கூறினால் தொழுகை முறிந்து வடும்.
அதே போல் தும்மக்கூடிய ஒருவருக்கு, தொழுதுகொண்டிருப்பவர் ‘‘யர்ஹமுஃகழ்ழாஹ்’’ என்று கூறுவதும் தொழுகையை முறிந்து விடும்.

أسئلة

பாடம் : 14 الدرس : 14

صلاة الجماعة

ஜமாஅஹ் தொழுகை

يصلي المسلمون في كل يوم في المساجد خمس صلوات جماعة ولصلاة الجماعة أمور ينبغي مراعاتها منها :

முஸ்லிம்கள் நாள்தோரும் பள்ளிவாயள்களில் ஐவேளைத் தொழுகைகளை கூட்டாக சேர்ந்து தொழுது வருகின்றார்கள் கூட்டாக தொழும் தொழுகையில் கவனிக்கப்படவேண்டிய சில விடயங்கள் உள்ளன.

அவைகளில் சில :

1. أن يقف المصلي خلف الإمام ولا يكبر إلا بعد أن يكبر الإمام

1. தொழுமொருவர் தான் பின்பற்றுகின்ற இமாமுக்கு பின்னால் நின்று, அவர் தக்பீர் சொன்னதன் பின்பே ம.்.மூம் தக்பீர் சொல்லவேண்டும்.

2. أن ينوي الصلاة جماعة فيقول بقلبه مثلا : أصلي فرض الظهر جماعة

2. தொழக்கூடியவர் ஜமாஅத்தாகத் தொழுவதாக நிய்யத் வைக்க வேண்டும். உதாரணமாக தனது உள்ளத்தினால். (ழுஹ்ருடைய பர்ளான தொழுகையை கூட்டாகத் தொழுகின்றேன்) என்று கூறவேண்டும்.

3. وإن كان في صلاة سرية يقرأ الفاتحة والسورة بعدها سرا وأما في الصلاة الجهرية فيقرأ الفاتحة فقط من غير أن يجهر ويستمع لقرءاة الإمام أما الإمام فيجهر بالفاتحة والتأمين والسورة في الركعتين الأولين وبكل التكبيرات ويقول : سمع الله لمن حمده

3. ஸிர்ரியத்தான ஒரு தொழுகையை ம.்.மூம் தொழுபவராயின், சூறா பாத்திஹாவையும் அதற்கு பின்னால் ஓதப்படும் சூறாவையும் தனக்கு மாத்திரம் கேட்கும் விதத்தில் ஓதுவார். ஜஹ்ரிய்யத்தான தொழுகையை தொழுபவராயின் சத்தத்தை உயர்த்தாமல் சூறா பாத்திஹாவை மாத்திரம் ஓதிவிட்டு இமாமின் கிராஅத்தை செவிமடுக்க வேண்டும். இமாம் சூறா பாத்திஹாவையும் அதைத் தொடர்ந்து ஆமீன் கூறுவதையும். இன்னுமொரு சூறாவையும் முதல் இரண்டு ரக்அத்துக்களிலே சத்தமாக ஓதவேண்டும். இன்னும் ஒவ்வொரு நகர்வுகளின் போது கூறப்படும் தக்பீர்களையும் ''ஸமிஅழ்ழாஹு' லிமன் ஹமிதஹ்'' என்பதையும் அனைத்து ரக்அத்துகளிலும் சத்தமாக ஓதுவார்.

4. أن يقول ءامين مع الإمام بعد أن يقرأ الإمام
( غير المغضوب عليهم ولا الضالين )

4. இமாம் சூறா பாத்திஹாவில் ''غير المغضوب عليهم ولاالضالين'' என்ற வசனத்தை ஓதியதை தொடர்ந்து அவரோடு சேர்ந்து ''ஆமீன்'' என கூறவேண்டும்.

5. أن يتبع الإمام ولا يسبقه فيركع بعد ركوع الإمام ويعتدل بعد اعتداله ويسجد بعد سجوده

5. ம.்.மூம் இமாமை பின் துயர வேண்டும். அவரை முந்தக் கூடாது. எனவே ம.்.மூம் இமாம் ருகூ.். செய்ததன் பின்னரே ருகூஉ செய்ய வேண்டும். இன்னும் இமாம் நிலைக்கு வந்ததன் பின்னரே ம.்.மூம்

நிலைக்கு வர வேண்டும். இன்னும் அவர் ஸுஜூத் செய்ததன் பின்னரே ம.ஃ.மூம் ஸுஜூத் செய்ய வேண்டும்.

6. وإذا صلى مقتديا ولا مأموم سواه يقف إلى يمين الإمام متأخراعنه قليلا ثم إذا جاء ثالث إلى خلف الإمام ووقف مع القادم في صف واحد

6 ஒருவர் தன்னையன்றி வேறொருவர் இல்லாத பட்சத்தில் இமாமைப் பின்பற்றி தொழுவாரேயானால். அவர் இமாமின் வலப்பக்கமாக சற்று பின்தள்ளி நிற்பார். பின்பு மூன்றாமொருவர் வந்தால், அவர் சற்று பின்தள்ளி வந்தவருடன் சேர்ந்து ஒரே வரிசையில் நிற்பார்.

7 أن لا يسلم المأموم قبل الإمام فإنه إن فعل ذلك بطلت صلاته

இமாம் ஸலாம் கூற முன் ம.ஃ.மூம் ஸலாம் கூறாமல் இருக்கவேண்டும். ம.ஃ.மூம் அவ்வாறு ஸலாம் கொடுத்தால் அவரது தொழுகை முறிந்து விடும்.

أسئلة

பாடம் : 15 الدرس : 15

## صلاة الجمعة
## ஜும்அஹ் தொழுகை

صلاة الجمعة فرض عين على الذكور الأحرار البالغين والعاقلين المقيمين غير المعذورين إذا كانوا أربعين مستوطنين في أبنية وفلو نقصوا عن الأربعين إو كانو مقيمين في الخيام لم تجب عليهم في مكانهم ومن العذر الشرعي أن يكون المسلم مريضا مرضا شديدا يشق عليه معه الذهاب إلى مكان الجمعة

புத்தியுள்ள, பருவத்தை எத்திய, சுதந்திரமுடையவர்களாகிய, மார்க்கம் அனுமதித்த காரணம் எதுவும் இல்லாத, ஓரிடத்தில் பூரணமான நான்கு நாட்கள் அல்லது அதை விட அதிகமான நாட்கள் தரிபடுவதாக எண்ணம் கொண்ட அனைத்து ஆண்கள் மீதும்
அவர்கள் வீடுகளிலே வசிக்கக் கூடிய ஊர்வாசிகளான நாற்பது பேர்களாக இருந்தால், ஜும்ஆவுடைய தொழுகை கடமையாகும். அவர்கள் நாற்பது பேரை விட குறைந்து விட்டாலோ அல்லது கூடாரங்களிலே வசிக்கக் கூடியவர்களாக இருந்தாலோ அவர்களுக்கு தாங்கள் வசிக்கும் இடத்தில் ஜும்ஆஹ் தொழுகை நிறைவேற்றுவது கடமையாகாது.
ஜும்ஆவை விடுவதற்கு மார்க்கம் அனுமதித்துள்ள காரணங்களில் ஒன்று ஒரு மனிதன் ஜும்அஹ் நடைபெறும் இடத்திற்கு செல்லமுடியாத அளவுக்கு கடுமையான நோயாளியாக இருப்பதாகும்.

وصلاة الجمعة ركعتان بدل صلاة الظهر يجهر الإمام فيهما ويشترط فيها :

ஜும்ஆவுடைய தொழுகையானது ழுஹ்ர் தொழுகைக்கு பகரமாக இரண்டு ரக்அத்தை கொண்டதாகும். அந்த இரண்டு ரக்அத்களிலும் இமாம், ஓதல்களை பிறர் கேட்கும் விதத்தில் சத்தமாக ஓத வேண்டும்.
ஜும்அஹ் தொழுகையின் நிபந்தனைகளாவன

أن يصلي بعد دخول وقت الظهر

அந்த தொழுகை ழுஹ்ருடைய நேரம் நுழைந்ததன் பின்னால் தொழுவிக்கப்பட வேண்டும்.

وأن يسبقها خطبتان بعد دخول وقت الظهر يسمعهما الأربعون

அந்த தொழுகைக்கு முன்பு நாற்பது பேர் செவிமடுக்கும் விதத்தில் இரண்டு குத்பாக்கள் ழுஹ்ருடைய நேரம் நுழைந்ததன் பின் நடைபெற்றிருத்தல் வேண்டும்.

وأن تصلى جماعة بالأربعين فلو نقص الأربعون واحدا لم يصلوا الجمعة بل الظهر

குறைந்த பட்சம் நாற்பது பேரைக் கொண்டாவது கூட்டாக அத்தொழுகை நடாத்தப்பட வேண்டும். நாற்பது பேரை விட ஒருவர் குறைந்தாலும் அவர்கள் ஜும்ஆஹ் தொழ முடியாது மாறாக ழுஹ்ரைத்தான் தொழ வேண்டும்.

وأن يقام في مكان واحد في البلد الواحد إلا عسر اجتماع الناس فيجوز التعدد بمقدار الحاجة

ஒரு ஊரில் ஒரு இடத்திலேயே ஜும்ஆஹ் தொழுகை நடாத்தப்பட வேண்டும். ஆனாலும் ஒரே இடத்தில் அனைவரும் ஒன்று கூடுவது கஷ்டமாக இருந்தால், தேவைக்கேற்ப பல இடங்களில் நடாத்த முடியும்.

وأركان الخطبتين

இரண்டு குத்பாக்களினதும் ருகுன்களாவன

1. حمد الله

அழ்ழாஹ்வை புகழ்தல்.

2. والصلاة على النبي

முஹம்மத் ﷺ அவர்கள் மீது ஸலாவத் சொல்லுதல்.

3. والوصية بالتقوى : كأن يقول : أوصيكم بتقوى الله ويأتي الخطيب بهذه الأركان الثلاثة في الخطبتين الأولى ولثانية

தக்வாவைக் கொண்டு வஸிய்யத் செய்தல். உதாரணமாக “நான் உங்களுக்கு கடமைகளை நிறைவேற்றும்படியும் ஹறாம்களை தவிர்ந்து நடக்கும்படியும் உங்களுக்கு நான் நல்லுபதேசம் புரிகிறேன்.” என்று கூற வேண்டும். இம்மூன்று ருகுன்களையும் இரு குத்பாக்களிலும் கட்டாயம் கூற வேண்டும்.

4. وءاية مفهمة في إحداهما ولو كانت قصيرة كأية قل هو الله أحد والأفضل أن يكون في الخطبة الأولى

ஒரு விடயத்தை முழுமையாக விபரிக்கக் கூடிய குர்ஆன் வசனமொன்றை இரு குத்பாக்களில் ஒன்றில் ஓத வேண்டும். அது சிறியதாக இருந்தாலும் சரி, உதாரணமாக قُلْ هُوَ اللهُ أَحَد என்ற வசனத்தை ஓதுவதைப் போல. முதலாவது குத்பாவில் இந்த ருகுன் இருப்பதே மிகச்சிறந்தது.

5. والدعاء للمؤمنين في الثانية

இரண்டாவது குத்பாவிலே மு.ஃமின்களுக்காக துஆ செய்தல் வேண்டும்.

ومن فاتته صلاة الجمعة صلى الظهر لأن الجمعة لا تصلى قضاء جمعة

குறிப்பு : எவருக்கு ஜும்ஆஹ் தொழுகை விடுபடுகின்றதோ அவர் ழுஹ்ரையே தொழ வேண்டும். ஏனென்றால் ஜும்ஆஹ் தொழுகையை ஜும்ஆஹ் தொழுகையாக கழா செய்ய முடியாது.

أسئلة

பாடம் : 16 الدرس : 16

صلاة المسبوق

**மஸ்பூகான ம.ஃமூமின் தொழுகை**

حثنا الرسول الله ﷺ على صلاة الجماعة وبين فضلها على صلاة المنفرد فقال : صلاة الجماعة أفضل من صلاة الفذ بسبع وعشرين درجة رواه البخاري ومسلم

முஹம்மத் ﷺ அவர்கள், எங்களை ஜமாஅத்தாக தொழுமாறு வலியுறுத்தியுள்ளார்கள். மேலும் தனித்துத் தொழுவதை விடவும் கூட்டாக தொழுவதினுடைய சிறப்பையும் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

**அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் : கூட்டாக தொழுவது தனித்துத் தொழுவதை விட 27 மடங்கு சிறந்தது, அறிவிப்பாளர்கள்.**

**(அறிவித்தவர் : இமாம் புஹாரீ, முஸ்லிம்)**

المسبوق هو الذي دخل في صلاة الجماعة بعد أن بدأ الإمام بها بحيث لم يدرك قدر الفاتحة من قيام الإمام أو كان الإمام في ركن ءاخر من أركان الصلاة كالركوع أو الإعتدال أو السجود أو التشهد مثلا وتدرك فضيلة الجماعة بإدراك جزء من الصلاة مع الإمام
மஸ்பூகான ம.்.மூம் என்றால் யார்?

ஜமாஅஹ் தொழுகையிலே இமாம் தொழுகையை ஆரம்பித்து, நிலையில் இருக்கும் பொழுது எவரொருவர் சூறா பாத்திஹாவை முழுமையாக ஓதிமுடிக்கும் அளவு நேரத்தை பெறாதவராக தொழுகையில் வந்து சேர்ந்து கொள்வாரோ அல்லது இமாம் ருகூஉ, ஸுஜூத், நடுநிலை, அத்தஹிய்யாத்து போன்ற வேறொரு நிலையில் இருக்கும் பொழுது இமாமுடன் இணைவாரோ அவரே மஸ்பூக் ஆவார்.

இமாமுடன் தொழுகையில் ஒரு பகுதியை அடைந்து கொள்வதன் மூலம் ஜமாஅஹ் தொழுகையின் கூலி கிடைத்து விடும்.

ماذا يفعل المسبوق ؟

மஸ்பூக் என்ன செய்ய வேண்டும்.

يدخل المسبوق في الصلاة بتكبيرة الإحرام مع النية ويتابع الإمام فيما هو فيه :

மஸ்பூக் நிய்யத் வைப்பதுடன் இஹ்ராமுடைய தக்பீரைக் கூறி, தொழுகையில் நுழைந்து, இமாம் எந்த நிலையில் இருப்பாரோ அதே நிலையை அடைந்து இமாமை பின்துயர வேண்டும்.

فإذا كان الإمام في ءاخر الفاتحة يبدأ المأموم بالقرءاة فإذا نزل الإمام للركوع يقطع القرءاة ويركع معه وتسقط عنه بقية الفاتحة

இமாம் சூறா பாத்திஹாவுடைய கடைசிப்பகுதியை ஓதிக் கொண்டிருந்தால் ம.ஃமூம் பாதிஹாவை ஓத ஆரப்பிப்பார்.

இமாம் அவரது பாதிஹா முடிந்து ருகூ.ஃவிற்கு சென்றுவிட்டால் ம.ஃமூம் தனது ஓதலை நிறுத்திவிட்டு இமாமுடன் சேர்ந்து ருகூஉ செய்வார்.

எஞ்சிய சூறா பாத்திஹாவை ஓதுவதினுடைய கடமை ம.ஃமூமை விட்டும் விழுந்து விடும்.

وإذا كان الإمام في الركوع يركع المأموم فإن ا طمأن راكعا قبل أن يرفع الإمام تحسب له الركعة وإن لم يطمإن يأتي بركعة بعد سلام الإمام

இமாம் ருகூஉவிலே இருந்தால் உடனே ம.ஃமூம் ருகூஉ செய்வார். இமாம் ருகூஉவிலிருந்து தலையை உயர்த்த முன்னர். ''ஸுப்ஹானழ்ழாஹ்'' என்று சொல்லும் அளவு நேரம் ம.ஃமும் இமாமுடன் ருகூஉவிலே தரிபட்டிருந்தால் அவருக்கு அந்த ரக்அத்தை கணக்கெடுக்கப்படும். ''ஸுப்ஹானழ்ழாஹ்'' என்று சொல்லும் அளவு நேரம் இமாமுடன் தரிபட்டிருக்காவிட்டால் அவருக்கு அந்த ரக்அத்தை கணக்கெடுக்கப்படமாட்டாது. இமாம் ஸலாம் கொடுத்ததன் பின்னர் அவர் இன்னொரு ரக்அத்தைத் தொழுதுகொள்வார்.

أما إذا كان الإمام في ما بعد الركوع في الاعتدال أوالسجود أو الجلوس فالمأموم يتابعه ولا تحسب له هذه الركعة بل يأتي بركعة بعد سلام الإمام

இமாம் ருகூஉவுக்கு பின்னுள்ள நடுநிலை அல்லது ஸுஜூத் அல்லது அதனுடைய இருப்பு போன்ற ஒரு ருகுனிலே இருந்தால், ம.ஃமூமும் இமாமை பின்துயர்வார். என்றாலும் ம.ஃமூமுக்கு அந்த ரக்அத் கணக்கெடுக்கப்படமாட்டாது. மாறாக அவர், இமாம் ஸலாம் கொடுத்ததன் பின்னர் ஒரு ரக்அத்தை தொழுதுகொள்வார்.

وإذا دخل في الصلاة والإمام في التشهد الأخير تابعه وبعد أن يسلم الإمام يقوم ويأتي بكل ركعات الصلاة

இமாம் கடைசி அத்தஹியாத்திற்காக உட்கார்ந்திருக்கும் பொழுது ஒருவர் தொழுகைக்குள் நுழைந்தால் அவர் இமாமை பின்துயர்ந்து தஷஹ்ஹுதுலே உட்கார்வார். பின்பு இமாம் ஸலாம் கொடுத்ததும் ம.ஃமூம் அந்த தொழுகையினுடைய அனைத்து ரக்அத்களையும் தொழுதுகொள்வார்.

تنبيه

تكبيرة الإحرام تقال في حال الوقوف ولو كان الشحص يريد إدراك الصلاة مع مصل راكع مثلا

குறிப்பு : தொழக்கூடியவர் ருகூஉவிலிருக்கும் பொழுது ஒருவர் சேர்ந்து தொழ நாடினாலும் சரியே! இஹ்றாமுடைய தக்பீர் நின்ற நிலையில் தான் கூறப்பட வேண்டும்.

أسئلة

பாடம் : 17 الدرس : 17

## قضاء الصلوات

## கழாவான தொழுகைகள்

قال رسول الله ﷺ : من نام عن صلاة أو نسيها فليصلها إذا ذكرها لا كفارة لها إلا ذلك رواه البخاري

***அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் :***

**"யாராவது தொழுகை நேரம் முடியும் வரை உறங்கினால் அல்லது தொழுகையை உரிய நேரத்தில் தொழ மறந்தால் அவர் ஞாபகிக்கும் போது தொழுது கொள்ள வேண்டும். அதற்கு அதை தோழுவதைத் தவிர வேறு எந்த குற்றப்பரிகாரமும் கிடையாது."**

**(அறிவித்தவர் : இமாம் புஹாரீ)**

فمن كان نائما وقت الصلاة ولم يستيقظ إلا بعد انتهاء وقتها فإنه يقضي تلك الصلاة وإذا نسي المسلم أداء الصلاة ولم يتذكرها إلا بعد انتهاء الوقت فإنه يقضيها وأما من فاتته صلوات كثيرة لا يعلم عددها بالظبط فإنه يبدأ بقضاء هذه الصلوات حتى تغلب على ظنه أنه أنه قضاها كلها

யாராவது தொழுகை நேரத்தில் உறங்கி தொழுகை நேரம் முடிந்ததன் பின்னால் விழித்தால் அவர் நிச்சயமாக அத்தொழுகையை கழா செய்ய வேண்டும். ஓர் முஸ்லிம் தொழுகையை நிறைவேற்றுவதை மறந்து அத்தொழுகையின் நேரம் முடிந்ததன் பின்னரே அவருக்கு ஞாபகம்வந்தால் நிச்சயமாக அவரும் அதை கழா செய்ய வேண்டும். யாருக்காவது கணக்கிட முடியாத விதத்தில் அதிகமான தொழுகைகள் தப்பியிருந்தால் அவர் அத்தொழுகைகள் அனைத்தையும் கழா செய்து விட்டேன் எனும் எண்ணம் மிகைக்கும் வரை அத்தொழுகைகளை கழா செய்ய ஆரம்பிப்பார்.

ولا يهمل المسلم الكامل قضاء ما عليه من الصلوات ويسرع في قضائها ولا يتقاعس عن القضاء ليشتغل بأمور المال والأولاد والتجارة ونحو ذلك

பரிபூரண முஸ்லிம் ஒருவர் தனக்கு கழாவான தொழுகைகளை கழா செய்வதை பிற்படுத்தாமல் அவசரமாக அவற்றை கழா செய்வார். மேலும் பணம், பிள்ளைகள், வியாபாரம் அது போன்ற விடயங்களில் ஈடுப்பட்டு அவற்றை கழா செய்வதை விட்டும் பராமுகமாக இருக்கமாட்டார்.

ويسن ترتيب قضاء الصلوات الفائتة فيقضي الصبح ثم الظهر وهكذا

தப்பிச்சென்ற தொழுகைகளை ஒழுங்கு முறைப்படி கழா செய்வது ஸுன்னத்தாகும். முதலாவது, ஸுப்ஹை கழா செய்வார். பின்னர் ழுஹ்ரை கழா செய்வார். இவ்வாறே ஒவ்வொரு தொழுகையையும் ஒழுங்கு முறைப்படி நிறைவேற்றுவார்.

فمن مات ولم يتم قضاء ما عليه من الصلوات وكان قد باشر بقضائها بهمة وفي نيته أن يكملها فالله لا بعذبه عليها إذا لم يتساكل

யாராவது தப்பிச்சென்ற தொழுகைகள் தனக்கு இருக்கும் நிலையில் அவற்றை முழுமையாக கழா செய்யாமல் மரணித்துவிடுவாரேயானால், அவருமொ அத்தொழுகைகள் அனைத்தையும் நிறை வேற்ற வேண்டும் எனும் எண்ணத்துடன் சோம்பேறித்தனம் காட்டாமல் உறுதியான நம்பிக்கையுடன் தொடர்ந்து கழா செய்து வந்திருந்தால், அழ்ழாஹ் அத்தொழுகைகளுக்காக அவரை வேதனை செய்யமாட்டான்.

ولا تصلي المرأة في حال الحيض أو النفاس ولا يجب عليها قضاء ما فاتها من صلاة أثناء الحيض والنفاس إنما يلزمها قضاء ما فاتها من الصيام أثناء الحيض والنفاس

ஒரு பெண் மாதவிடாய், பிள்ளைப்பேறு ஆகிய காலங்களில் தொழக்கூடாது. மாதவிடாய், பிள்ளைப்பேறு ஆகிய காலங்களில் தப்பிச் சென்ற தொழுகைகளை இப்பெண் கழா செய்வது கடமையாகமாட்டாது. எனினும் அக்காலங்களில் தப்பிச்சென்ற நோன்பை கழா செய்வது அவசியமாகும்.

أسئلة

الدرس : 18　　　　　　பாடம் : 18

## صيام شهر رمضان المبارك

## பரகத் பொருந்திய ரமழான் மாதத்தின் நோன்பு நோற்றல்

قال الله تعالى :

شهر رمضان الذي أنزل فيه القرءان هدى للناس وبينات من الهدى والفرقان فمن شهد منكم الشهر فليصمه

அழ்ழாஹ் தஆலா கூறியுள்ளான் :

விளக்கம் :

“ரமழான் மாதத்திலே லைலதுல் கத்ர் இரவில்தான் அல்-குர்ஆன் அருளப்பட ஆரம்பமானது.

இந்த அல்-குர்ஆன் மக்களுக்கு சத்தியத்தின் பக்கம் வழிகாட்ட அழ்ழாஹ்வால் அருளப்பட்டது. அது தெளிவான அத்தாட்சியாகும். அழ்ழாஹ் யாருக்கு நேர்வழியை நாடியிருக்கிறானோ அவனுக்கே இந்த அத்தாட்சிகள் மூலம் நேர்வழியை காட்டுவான்.

இந்த அல்-குர்ஆன் சத்தியத்தையும், அசத்தியத்தையும் வேறுபடுத்திக்காட்டும் ஒரு வேதமாகும்.

பருவத்தை அடைந்த புத்தியுள்ளவர்களில் யாரெல்லாம் இந்த மாதத்தில் பிரயாணிகளல்லாமல் ஊர்வாசிகளாக இருப்பார்களோ அவர்கள் இம்மாதத்தில் நோன்பு நோற்கட்டும். மார்க்கம் அனுமதித்த காரணமின்றி நோன்பை விட வேண்டாம்.”

شهر رمضان :

புனிதமான ரமழான் மாதம்.

الصيام عبادة عظيمة فرضها الله على المسلين ليقوموا بها في شهر رمضان من كل عام وفيها الثواب الجزيل من الله سبحانه وتعالى

நோன்பு ஒரு மகத்தான வணக்கமாகும்.

இதனை ஒவ்வொரு வருடமும் றமழான் மாதத்தில் நிறை வேற்றுவதை முஸ்லிம்களுக்கு அழ்ழாஹ் கடமையாக்கியுள்ளான். இக்கடமையை நிறைவேற்றுவதிலே மகத்தான கூலி வழங்கப்படும்.

معنى الصيام :

நோன்பு நோற்றல் என்பதன் கருத்து

والصيام هو الامتناع عن الأكل والشرب وسائر المفطرات مع النية من طلوع الفجر إلى غروب الشمس فيقول بقلبه : نويت صيام غد عن أداء فرض رمضان هذه السنة إيمانا واحتسابا لله تعالى

நோன்பு நோற்றல் என்பது : சாப்பிடுதல், குடித்தல் மற்றும் நோன்பை முறிக்கும் ஏனைய காரியங்களை பஜ்ர் உதயமானதிலிருந்து சூரியன் மறையும் வரை நோன்பு நோற்கும் நிய்யத்துடன் தவிர்ந்து கொள்வதாகும்.

இந்த வருடத்தின் றமழான் மாதத்தின் பர்ழான நோன்பை ஈமானுடனும், அழ்ழாஹ்விடம் நன்மையை எதிர்பார்த்தவனாகவும் அதாவாக நாளை பிடிக்க நிய்யத் வைத்து விட்டேன் என்று கூறுவதாகும்.

مفسدات الصيام

நோன்பை முறிக்கும் விடயங்கள் :

هناك أمور تفسد الصيام منها :

நோன்பை முறிக்கும் விடயங்கள் உள்ளன.
அவைகளில் சில

1. الأكل والشرب ولو قليلا إذا كان ذاكرا أنه في الصيام أما من أكل أو شرب ناسيا لم يفطر ولو كان صائما في غير رمضان وذلك لقول النبي ﷺ من نسي وهو صائم فأكل أو شرب فليتم صومه فإنما أطعمه الله وسقاه رواه البخاري

1. சாப்பிடுதல், குடித்தல் அது கொஞ்சமாக இருப்பினும் சரி.
அதாவது தான் நோன்பாளி என்பதை ஞாபகித்தவனாக உள்ள நிலையில் சாப்பிடுதல், குடித்தல். யாராவது தான் நோன்பாளி என்பதை

மறந்த நிலையில் றமழான் மாதத்திலோ அல்லது றமழான் அல்லாத காலத்திலோ சாப்பிட்டால் அல்லது குடித்தால் அவரது நோன்பு முறியாது.

காரணம் **அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் :**

**"யாராவது தான் நோன்பாளியாக உள்ள நிலையில் மறந்து சாப்பிட்டால் அல்லது குடித்தால் அவர் தன் நோன்பை பூரணப்படுத்தட்டும் அவருக்கு உணவு கொடுத்ததும் நீர் புகட்டியதும் அல்லாஹ்வே"**

**(அறிவித்தவர் : இமாம் புஹாரீ)**

2. وإذا أخرج الصائم القئ عمدا بإصبعه مثلا أفطر وأما إن غلبه القئ فلا يفطر

நோன்பாளி வேண்டுமென்று தன் விரலை விட்டு வாந்தியை வரவழைத்தால் நோன்பு முறியும். வாந்தி தன்னை மிகைத்து அதுவாகவே வெளியேறினால் நோன்பு முறிந்து விடாது.

3. والقطرة في الأذن ولأنف تفطر إذا وصل المقطور إلى الجوف أما القطرة في العين فلا تفطر

காது மற்றும் மூக்கின் உட்பகுதிக்குள் நீர்த்துளி சென்றால் நோன்பு முறிந்து விடும். என்றாலும் கண்ணுக்குள் சென்றால் நோன்பு முறிந்து விடாது.

هناك حالات يجوز فيها الفطر منها :

நோன்பை விடுவதற்கு அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளன. அவைகளில் சில :

المريض مرضا يخاف على نفسه معه الضرر من الصوم

நோன்பு நோற்பதினால் தனக்கு பெரும்பாதிப்பு ஏற்படும் என பயப்படும் அளவுக்கு நோய்வாய்ப்பட்டிருக்கும் நோயாளியும் நோன்பை நோற்காது விட முடியும்.

والمسافر سفرا طويلا كالذي يسافر من بيروت إلى دمشق

நீண்ட பிரயாணம் மேற் கொள்ளக்கூடிய பிரயாணியும் நோன்பை விட முடியும்.

உதாரணம் : பைரூத்திலுந்து டமஸ்கஸுக்கு பிரயாணம் செய்வரைப் போல.

ولا يجوز للحائض والنفساء الصوم وعليهما القضاء بعد انتهاء شهر رمضان
மாதவிடாய் பெண்ணும், பிள்ளைப்பேறு ஏற்பட்ட பெண்ணும் நோன்பு நோற்கக்கூடாது. றமழான் முடிந்ததன் பின்னர் அவ்விருவரும் நோன்பை கழா செய்வது அவசியமாகும்.

أسئلة

பாடம் : 19 الدرس : 19

**الزكاة**

**ஸகாத்**

قال الله تعالى :
وأقيموا الصلاة وءاتوالزكاة
سورة النور

***அல்லாஹ் தஆலா கூறியுள்ளான் :***

**விளக்கம் :**

***"தொழுகையை நிறைவேற்றுங்கள். ஸகாத்தை கொடுங்கள்."***

***(அத்தியாயம் : அந்-நூர்)***

فرض الله تعالى على المسلم أن يدفع قسما معلوما من ماله إذا وجبت فيه الزكاة للفقراء والمساكين وغيرهم من المسلمين الذين ذكرهم الله تعالى في الآية الكريمة :
إنما الصدقات للفقراء والمساكين والعاملين عليها والمؤلفة قلوبهم وفي الرقاب والغارمين وفي سبيل الله وابن السبيل
سورة التوبة

ஒரு முஸ்லிம் தன்னுடைய சொத்தில் ஸகாத் கடமையானால் அச்சொத்திலிருந்து குறிப்பிட்ட அறியப்பட்ட ஒரு பகுதியை

புகராக்களுக்கும் மிஸ்கீன்களுக்கும் மற்றுமுண்டான அல்-குர்ஆனில் கூறப்பட்ட ஏனைய முஸ்லிம்களுக்கும் கொடுப்பதை, அல்லாஹ் கடமையாக்கியுள்ளான்.

***அல்லாஹ் தஆலா கூறியுள்ளான் :***

விளக்கம் :

அல்லாஹ் அவனது அடியார்களுக்கு விதித்த விதியொன்றே, ஸகாத்தை பின்வரும் எட்டு வகையினரைத் தவிர வேறு எவருக்கும் கொடுக்கவும் முடியாது. அப்படிக் கொடுப்பது ஏற்றுக்கொள்ளப்படவுமாட்டாது.

அக்கூட்டத்தினர்கள் :-

1. الفقراء : هم الذين لا يجدون نصف كفايتهم الضرورية

فقراء : தங்களுக்கு அத்தியவசியமானதின் அரைப்பகுதியைக் கூட பெற்றுக் கொள்ளாதவர்கள்.

2. المساكين : هم الذين لا يجدون كل كفايتهم الضرورية ولكن يجدون نصفها أو أكثر

مساكين : தங்களுக்கு அத்தியவசியமான அனைத்தையும் பெற்றுக் கொள்ளாதவர்கள். என்றாலும் தனக்கு அத்தியவசியமானதின் அரைவாசியையோ அல்லது அதைவிடஅதிகமானதையோ பெற்றுக் கொள்பவர்கள்.

3. والعاملون عليها : هم الذين يجمعون الزكاة للخليفة بدون راتب

العاملون عليها : இவர்கள் ஸகாத் பொருட்களை எந்த ஊதியமுமின்றி கலீபாவிடம் சேர்த்துக் கொடுப்பவர்கள்.

4. والمؤلفة قلوبهم : هم الذين أسلموا حديثا ويرجى بإعطائهم من الزكاة إسلام نظراهم

المؤلفة قلوبهم : புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்கள் மேலும் இவர்களுக்கு ஸகாத் கொடுப்பதின் மூலம் இவர்களைப் போன்றோர் இஸ்லாத்துக்குள் வருவதை ஆதரவுவைக்கப்படுமே அவர்களுமாகும்.

5. وفي الرقاب : هم العبيد الذين شرط عليهم أسيادهم قدرا من المال ليتحرروا

وفي الرقاب : இவர்கள் உரிமைபெறுவதற்காக தங்களுடைய எஜமான்களினால் ஒரு தொகை பணம் செலுத்துமாறு நிபந்தனையிடப்பட்ட அடிமைகள்.

6. والغارمين : هم المدينون العاجزون عن وفاء ديونهم فير المحرمة

الغارمون : இவர்கள் ஹலாலான கடன்களை நிறைவேற்ற முடியாத கடன்காரர்கள்.

7. وفي سبيل الله : هوالغزاة المتطوعون في سبيل الله

அல்லாஹ்வுக்காக சம்பளமின்றி யுத்தம் செய்யும் போராளிகள்.

8. وابن السبيل : هو المسافر الذي مر ببلد الزكاة وليس معه ما يرده إلى بلده

وابن السبيل : ஸகாத் வழங்கப்படும் ஊருக்கு பிரயாணம் மேற்கொண்ட ஒருவர் மீண்டும் தன்னுடைய ஊருக்கு திரும்பிச் செல்ல வசதியற்றவர்.

كذلك يجب على كل مسلم مكلف أن يدفع زكاة الفطر في رمضان أو يوم العيد عن نفسه وزوجته وأولاده الصغار ووالديه إذا كانا فقيرين

பருவத்தை எத்திய, புத்தியுள்ள, முஸ்லிமான ஒவ்வொருவரும் றமழான் மாதத்தில் அல்லது பெருநாள் தினத்தன்று தனக்காகவும், தன் மனைவி, தன் சிறுபிள்ளைக்களுக்காகவும் மேலும் தன் பெற்றோர் பகீறாக இருப்பின் அவர்களுக்காகவும் ஸகாதுல் பித்ர் கொடுப்பது கடமையாகும்.

زكاة الفطر

ويدفع عن كل نفس صاعا من غالب قوت البلد كالقمح لمسلم فقيرا أو غيره من مستحقي الزكاة والصاع يساوي أربع حفنات باليدين المعتدلتين.

ஸகாதுல் பித்ர்

ஊரின் பெரும்பான்மையான உணவிருந்து ஒவ்வொருவருக்காகவும் ஒரு ‘‘ஸாஉ’’ வீதம் பகீரான முஸ்லிம்களுக்கோ அல்லது பகீரல்லாத ஏனைய ஸகாத் பெறத் தகுதியானவர்களுக்கோ கொடுப்பார். உதாரணம் : கோதுமை

‘‘ஸாஉ’’ என்பது நடுத்தரமான இரு கைகளினால் நிரம்பிய நான்கு அள்ளுதல்களாகும்.

أسئلة

# فصل

# الأخلاق الإسلامية

# இஸ்லாம் கூறும் நற்குணங்கள் பற்றிய விபரம்

**الرياء**

**முகஸ்துதி**

قال رسول الله ﷺ : إن أخوف ما أخاف عليكم الشرك الأصغر قالوا وما الشرك الأصغر يا رسول الله قال : الرياء

رواه أحمد بن حنبل

***அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் :***

***“நான் உங்களின் மீது மிகவும் பயப்படுவது சிறிய ஷிர்க் ஆகும் என்றார்கள். சிறிய ஷிர்க் என்றால் என்ன என்று ஸஹாபாக்கள் கேட்க முகஸ்துதி என்று பதிலளித்தார்கள்.”***

***(அறிவித்தவர் : இமாம் அஹ்மத்)***

الرياء هو العمل بالطاعة طلبا لمحمدة الناس أي أن يمدحوه وهو عكس الإخلاص والإخلاص هو العمل بالطاعة طلبا لرضا الله وحده قال عليه الصلاة والسلام إنما الأعمال بالنيات روا ه البخاري ومسلم أي أن العمل الصالح لا بد من نية صحيحة خالصة لوجه الله تعالى ليكون

مقبولا فالمسلم البالغ إذا صلى ليذكره الناس بالمدح أو ليقولوا عنه فلان مصل فلان تقي فإنه يسقط عنه الفرض ولكنه وقع في معصية الرياء ولا ثواب له في صلاته

முகஸ்துதி என்பது மக்களுடைய புகழ்ச்சியை வேண்டி அதாவது மக்கள் அவனை புகழ வேண்டும் என்பதற்காக ஒரு வணக்க வழிபாட்டைச் செய்வதாகும். மேலும் அது (முகஸ்துதி) இஹ்லாஸுக்கு எதிரானதாகும்.

இஹ்லாஸ் என்பது அல்லாஹ்வுடைய பொருத்தத்தை மட்டுமே வேண்டி ஒரு வணக்க வழிபாட்டைச் செய்வதாகும்.

***அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் :***

***“அடியான் வைக்கும் நிய்யத்தின் பிரகாரமே அவன் மேற்கொள்ளும் வணக்கங்களுக்கு கூலி வழங்கப்படும்.”***

***(அறிவித்தவர்கள் : இமாம் புஹாரீ, முஸ்லிம்)***

அதாவது ஒரு ஸாலிஹான அமல் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடிய தூய்மையான, சரியான எண்ணம் இருப்பது அவசியமாகும்.

எனவே பருவமடைந்த ஒரு முஸ்லிம், மக்கள் அவனைப் புகழ வேண்டும் என்பதற்காக அல்லது அவனை தொழக்கூடிய மனிதன் தக்வாதாரி என்று கூறுவதற்காக தொழுதால், அவனை விட்டும் தொழுகையின் கடமை நீங்கிவிடும். எனினும் முகஸ்துதி என்ற பெரும் பாவத்திலே சிக்கிவிடுவதோடு அவனது தொழுகையிலே எந்தவொரு நன்மையும் கிடைக்காது.

وكذلك إذا صام وكان قصده من صيامه أن يقول عنه الناس إنه زاهد أو عابد فهذا يكون مرائيا في صومه فيسقط عنه الفرض ولكنه يكون قد وقع في المعصية ولا ثواب في صيامه

அதே போல் அவனை மக்கள் உலகப் பற்றற்றவர் அல்லது வணக்கசாலி என்று கூற வேண்டும் என்ற நோக்கத்தோடு நோன்பு நோற்றால், அவனும் அவனுடைய நோன்பிலே முகஸ்துதிக்காரனாக ஆகிவிடுவான்.

அவனை விட்டும் நோன்பின் கடமை நீங்கிவிடும் எனினும், அவன் பாவத்திலே சிக்கிவிடுவான். அவனுடைய நோன்பிலே அவனுக்கு எந்த வொரு நன்மையும் கிடையாது.

كذلك كل عمل فيه طاعة إذا فعله الإنسان وكان قصده أن يمدحه الناس يقع صاحبه في معصية كبيرة وهي الرياء ولا ثواب له في هذا العمل

அதே போல், எந்த செயல்களிலெல்லாம் வணக்கவழிபாடுகள் இருக்கிறதோ அதை ஒருவன், மக்கள் அவனைப் புகழ வேண்டும் என்ற எண்ணத்தில் செய்தால் முகஸ்துதி எனும் பெரும் பாவத்தில் சிக்கிவிடுவதோடு தான் செய்த அமலில் எந்தவொரு கூலியையும் பெறமாட்டான்.

فالمسلم إذا فعل الطاعة من صلاة أو صيام أو نحو ذلك ينبغي أن يقصد بها رضا الله وحده

எனவே ஒரு முஸ்லிம், தொழுகை, நோன்பு அல்லது அது போன்ற ஒரு வணக்கத்தைச் செய்தால் அந்த அமலிலே அழ்ழாஹ்வுடைய பொருத்தத்தை பெறுவதை மாத்திரம் எண்ணம் கொள்வது அவசியமாகும்.

أسئلة

الدرس :2

பாடம் : 2

## الغيبة والبهتان

## புறம் பேசுதலும் அவதூறும்

قال النبي ﷺ : أتدرون ما الغيبة ؟ قالوا الله ورسوله أعلم

قال ذكرك أخاك بما يكره قيل أفرأيت إن كان في أخي ما أقول قال : إن كان فيه ما تقول فقد اغتبته وإن لم يكن فيه ما تقول فقد بهته

رواه مسلم

*அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் "புறம் பேசுதல் என்றால் என்ன? வென்று உங்களுக்கு தெரியுமா?" என ஸஹாபாக்களிடம் கேட்டார்கள். அதற்கு அவர்கள் "அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே மிகவும் அறிந்தவர்கள்," என்றனர்.*

*"உன் சகோதரன் வெறுக்கும் ஒன்றைப் பற்றி நீ கூறுவதாகும்." என அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள். "தான் கூறுவது அந்த சதோதரனிலே இருந்தால் அதைப் பற்றி என்ன கூறுவீர்?"என கேட்கப்பட்ட போது.*

*"நீ கூறுவது அவனிடம் காணப்பட்டால் நீ அவனைப் பற்றி புறம்பேசிவிட்டாய், அது அவனிடம் இல்லையெனில் நீ அவன் மீது இட்டுக்கட்டிவிட்டாய் எனக் கூறினார்கள்."*

*(அறிவித்தவர் : இமாம் முஸ்லிம்)*

عرف النبي عليه الصلاة والسلام في هذا الحديث معصيتين من معاصي اللسان هما : الغيبة والبهتان

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் இந்த ஹதீஸிலே நாவினால் ஏற்படக்கூடிய இரு பாவங்களை அறிவித்துத் தந்துள்ளார்கள்.

புறம் பேசுவதும் இட்டுக்கட்டுவதுமே அவ்விரண்டுமாகும்.

فالغيبة هي ذكرك أخاك المسلم بما يكره ممافيه خلفه فمثلا لوقال مسلم في مسلم ءاخر فلان أعور وهو لا يرضى أن يقال عنه أعور فيكون القائل قد وقع في الغيبة المحرمة

புறம் பேசுதல் என்பது : உன்னுடைய முஸ்லிமான சகோதரன் வெறுக்கும் விடயமொன்றை, அவன் இல்லாத நேரத்தில் கூறுவதாகும்.

உதாரணம் : ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமை பற்றி இன்னார் ஒற்றைக் கண்ணன் என்று கூறுவதை அவர் ஏற்றுக் கொள்ளாதவராக இருந்தால், அவ்வாறு கூறியவன் புறம் பேசுதல் என்ற தடைவிதிக்கப்பட்ட பாவத்திலே சிக்கிவிடுவார்.

وأما البهتان فهو أن تذكر أخاك المسلم في خلفه بما يكره بشئ ليس فيه فمثلا لو قال مسلم عن مسلم ءاخر في غيبته فلان كذاب وهو ليس بكذاب فقد وقع القائل في البهتان وهو أشد معصية من الغيبة

இட்டுக்கட்டுதல் என்பது ஒரு முஸ்லிமான சகோதரனிடம் இல்லாத, அவன் வெறுக்கக்கூடிய ஒன்றை அவன் இல்லாத போது கூறுவதாகும்.

உதாரணம் : ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமைப் பற்றி ‘‘இவன் ஒரு பொய்யன்’’ என்று அவன் இல்லாத போது கூறினால், அவன் பொய்யனாக இல்லாதபட்சத்தில், அதை கூறியவர் இட்டுக்கட்டுதல் என்ற பாவத்திலே நிச்சயமாக சிக்கிவிடுவார். இப்பாவமானது புறம் பேசுவதை விடவும் மிகக் கொடியதாகும்.

فالمسلم عليه أن لا يؤذي المسلمين وينبغي أن يكون خلقه حسنا وإذا وجد عيبا في أخيه يستره ولا يفضحه بين الناس

ஒரு முஸ்லிம் பிற முஸ்லிம்களை நோவினை செய்யக்கூடாது. இன்னும் அவனது பண்புகள் அழகான முறையில் இருப்பது அவசியமாகும். மேலும் தன்னுடைய சகோதரனிடம் ஒரு குறையைக் கண்டால் அதனை மறைத்துவிட வேண்டும். மாறாக அவனை மக்களுக்கு மத்தியில் கேவலப்படுத்தமாட்டான்.

فالغيبة والبهتان يؤديان إلى الشجار والخصومات بين الأحباب والأصدقاء فتجنب أن تقع في الغيبة والبهتان

எனவே புறம் பேசுவதும், இட்டுக்கட்டுவதும் பிரியமானவர்களுக்கிடையிலும் நண்பர்களுக்கிடையிலும் பிரச்சினைகளையும், முரண்பாடுகளையும் ஏற்படுத்தும். எனவே புறம்பேசுதல், அவதூறு எனும் பாவங்களில் சிக்கிக்கொள்வதை விட்டும் தவிர்ந்து கொள்ள வேண்டும்.

أما الكلام في الشخص بما فيه ليحذره الناس كالتحذير من الذي يغش الناس في الطعام أو يغش الناس في أمر الدين فهذا جائز بالإجماع بل هو واجب لأنه من باب إنكار المنكر الواجب

ஒருவனை எச்சரிக்கை செய்யும் விதத்தில் அவனிடம் காணப்படும் விடயங்கள் பற்றி பேசுவதானது உதாரணமாக மக்களை ஏமாற்றி உணவுப் பொருட்களை விற்பனை செய்பவனை விட்டும் மக்களை எச்சரிப்பது அல்லது மார்க்க விடயங்கிலே பிழையான கருத்துக்களைக் கூறி மக்களை ஏமாற்றிக் கொண்டிருப்பவனை விட்டும் எச்சரிக்கை செய்வது போன்ற விடயங்களுக்காக அவனிடம் காணப்படும் விடயங்கள் பற்றி பேசுவதானது இஜ்மாவின் பிரகாரம் ஆகுமானதாகும். மேலும் அது தீயவைகளை தடுத்தல் என்ற வகையில் பார்க்கும் போது கட்டாயக் கடமையாகவும் இருக்கிறது.

أسئلة

الدرس : 3

பாதம் : 3

**الصدق والكذب**

**உண்மையும் பொய்யும்**

قال النبي صلى الله عليه وسل : إن الصدق يهدي إلى البر وإن البر يهدي إلى الجنة وإن الرجل ليصدق حتى يكتب عند الله صديقا وإن الكذب يهدي إلى الفجور وإن الفجور يهدي إلى النار وإن الرجل ليكذب حتى يكتب عند الله كذابا

رواه البخاري ومسلم

***அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் :***

***"உண்மை நலவின் பால் இட்டுச் செல்லும். நலவு என்பது சுவனத்தின் பால் இட்டுச் செல்லும். ஒரு மனிதன் அழ்ழாஹ்விடத்திலே உண்மையாளன் என்று எழுதப்படும் வரை உண்மையுரைப்பான். பொய் என்பது கெடுதியின் பால் இட்டுச் செல்லும். கெடுதியானது நரகின் பால் இட்டுச் செல்லும். ஒரு மனிதன் அழ்ழாஹ்விடத்தில் பொய்யன் என்று எழுதப்படும் வரை பொய்யுரைப்பான்."***

***(அறிவித்தவர் : இமாம் புஹாரீ, முஸ்லிம்)***

في هذا الحديث الشريف حثنا الرسول عليه الصلاة والسلام على قول الصدق وحذرنا من قول الكذب والكذب هو الكلام بخلاف الواقع وهو حرام في الجد والمزاح

இந்த சங்கையான ஹதீஸில் உண்மை உரைக்குமாறு அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் எங்களுக்கு வலியுறுத்தியுள்ளார்கள். மேலும் எங்களுக்கு பொய் பேசுவதை எச்சரித்துமுள்ளார்கள்.

பொய் என்பது நடந்த ஒரு நிகழ்விற்கு மாற்றமாகக் கூறுவதாகும். மேலும் அது தெண்டித்து (ஸீரியஸாக) சொன்னாலும் நகைச்சுவைக்காகச் சொன்னாலும் ஹறாம் ஆகும்.

فالمسلم إذا تكلم بكلام بخلاف الحقيقة وهو يعلم ذلك فقد وقع في معصية الكذب مثال على ذلك أن يقول شخص أنا ضربت فلانا وهو لم يضربه

எனவே ஒரு முஸ்லிம் தெரிந்து கொண்டே ஒரு விடயத்தை நடந்ததற்கு மாற்றமாக பேசினால் அவன் நிச்சயமாக பொய் என்ற பாவத்திலே சிக்கிவிட்டான்.

உதாரணம் : ஒருவர் இன்னொருவரை அடிக்காமல் அவரை தான் அடித்ததாக கூறுதல்.

والكذب إذا كان يؤدي إلى إيذاء مسلم وإيقاع الضرر به فإنه بكون حينئذ معصية كبيرة فينبغي إن تعود لسانك على قول الصدق وأن تتجنب الكذب فالكذب عادة شنيعة قبيحة فكم من أناس تعودوا الكذب حتى عدهم الناس كذابين فصاروا غير موثوقين عند الناس وتذكر أن النبي عليه الصلاة والسلام لم يكذب في حياته قط حتى سماه قومه الصادق الأمين وكذلك سائر الأنبياء لا يكذبون قط

ஒரு பொய் ஒரு முஸ்லிமை நோவினை செய்யுமாக இருந்தால் அல்லது அவனுக்கு தீங்கேற்படுத்துமாக இருந்தால் அப்பொது அது பெரும் பாவமாகும்.

உண்மை கூறுவதிலே உன் நாவைப் பழக்கப்படுத்திக் கொள்வது அவசியமாகும். மேலும் பொய் கூறுவதைத் தவிர்ந்து கொள்வதும் உன் மீது அவசியமாகும். எனவே பொய் பேசுவது கேவலமான, அசிங்கமான பழக்கமாகும்.

மனிதர்களின் எத்தனையோ பேர், பொய் பேசி பொய் பேசி தன்னை பொய்யன் என்று ஏனையோர் எண்ணும் அளவுக்கு பொய் பேசுகிறார்கள். அதனால் மக்களிடையே நம்பிக்கையற்றவர்களாகவும் ஆகிவிடுகிறார்கள்.

அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்களுடைய கூட்டம் அவர்களை உண்மையாளர், நம்பிக்கையாளர் என்று கூறும் அளவுக்கு அவர் தன் வாழ்நாளிலே அணுவளவு கூட பொய் கூறவில்லை என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

அதே போல் தான் ஏனைய நபிமார்களில் எவரும் சிறிதளவெனும் பொய் பேசியதே இல்லை

أسئلة

الدرس : 4

பாடம் : 4

**السرقة والأمانة**

**களவு எடுத்தலும் நேர்மையும்**

قال الله تعالى :

والسارق والسارقة فاقطعوا أيديهما جزاء بما كسبا نكالا من الله

سورة المائدة

*அழ்ழாஹு" தஆலா கூறியுள்ளான் :*

*விளக்கம் :*

***"கால்வாசி தீனார் அல்லது அதை விட அதிகமான பெறுமதியுடைய ஒரு பொருளை அப்பொருள் பாதுகாக்கப்பட பொருத்தமான இடத்தில் வைக்கப்பட்ட நிலையில் அதை ஒருவன் திருடினால் அவனது வலது கரத்தை வெட்டுங்கள். மீண்டும் திருடினால் அவனது இடது காலை வெட்டுங்கள். மீண்டும் திருடினால் அவனது இடது கையை வெட்டுங்கள். மீண்டும் திருடினால் அவனது வலது காலை வெட்டுங்கள். திருடியவனின் கரத்தை துண்டிப்பதே அழ்ழாஹ் இவ்வுலகில் திருடர்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் தண்டனையாகும்."***

***(அத்தியாயம் : அல்-மாஇதஹ்)***

السرقة هي أخذ مال الغير خفية بدون رضاه وهي حرام ومرض اجتماعي خطير

களவு என்பது பிறருடைய பொருளை அவருடைய விருப்பமின்றி அவருக்குத் தெரியாமல் எடுப்பதாகும். அது ஹறாமாகும், மேலும் அது சமுதாயத்திலே பரவியுள்ள பயங்கரமான நோயாகும்.

فالمسلم إذا أخذ مال غيره على وجه لا يحل له بالسرقة يكون قد أوقع نفسه في ذنب من الذنوب لأن الله عز وجل حرم على الإنسان إن يأخذ من مال الغير بدون رضاه بلا حق

ஒரு முஸ்லிம் தனக்குச் சொந்தமில்லாத இன்னொருவருடைய பொருளைத் திருடுவதன் மூலம் களவெனும் பாவத்தில் சிக்கிக்கொள்கிறான். ஏனென்றால் ஒருவர் பிறருடைய பொருளை எந்த உரிமையுமில்லாமல் அவர்களின் பொருத்தமின்றி எடுப்பதை அழ்ழாஹ் ஹறாமாக்கியுள்ளான்.

والإنسان قد تحدثه نفسه إذا رأى مال غيره أن يأخذ جزء منه فيقول في نفسه مثلا : ءاخذ جزاء يسيرا فقط إن صاحب هذا المال غني لن يؤثر عليه فقدان هذا المال أويقول : إن صندوق المال مفتوح أمامي ءاخذ منه ما أشاء لن يعرف أحد بذلك أو يقول : رفاقي يلبسون الثياب الجديدة لماذا لا أسرق لأشتري ثيابا كثيابهم وأخذية كأخذيتهم

ஒரு மனிதனுடைய உள்ளம் இன்னொருவருடைய பொருளைக் கண்டால் அதிலிருந்து ஒரு சிறு பங்கை எடுக்குமாறு ஒரு வேளை கூறலாம்.

உதாரணம் : இந்த பொருளுடைய சொந்தக்காரன் ஒரு பணக்காரன். ‘‘இந்த பொருளை இழப்பதன் மூலம் அவனுக்கு எந்த ஒரு பாதிப்பும் ஏற்பாடாது’’ இதிலிருந்து ஒரு சிறிய பங்கை மாத்திரம் எடுக்கிறேன் என்று தன்னுடைய உள்ளத்திலே ஒரு மனிதன் கூறிக்கொள்வதைப் போல. அல்லது ‘‘இந்த பணப்பெட்டி எனக்கு முன்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நான் நாடிய அளவு அதிலிருந்து எடுப்பேன். அதனை நிச்சயமாக யாரும் அறிய மாட்டார்கள்’’ என்று தன்னுடைய உள்ளத்திலே கூறிக் கொள்வதைப் போல. அல்லது என்னுடைய நண்பர்கள் புதிய ஆடை அணிகிறார்கள் நான் அவர்களின் ஆடைகளைப் போன்று புதிய ஆடைகள் வாங்குவதற்கு அல்லது அவர்களுடைய பாதணிகள் போன்ற பாதணிகள் வாங்குவதற்கு ஏன் திருடக்கூடாது என்று தன்னுடைய உள்ளத்தில் கூறிக் கொள்வதைப் போல.

فليراقب الإنسان نفسه وليحذر وساوس الشيطان الذي يريد أن يوقعه في معصية الله وظلم الغير وأخذ ماله بغير حق وقد يجره ذلك إلى الفضيحة والسجن وغير ذلك فضلا عن العذاب الذي يستحقه في الآخرة

ஒரு மனிதன் தன்னை கண்காணித்து கொள்ளட்டும். மேலும் அவனைப் பாவத்திலே சிக்கவைப்பதற்கு ஆசைப்படும் ஷைதானுடைய ஊசாலாட்டங்கள் மேலும் பிறருக்கு அநியாயம் செய்தல், பிறருடைய பொருளை உரிமையின்றி எடுத்தல் போன்ற விடயங்களில் இருந்தும் எச்சரிக்கையாக இருந்துகொள்ளட்டும்.

இவ்வாறான குற்றச் கெயல்களின் மூலமாக மறுமை நாளிலே அவன் நரக வேதனையைத் தகுதியாக்கிக் கொள்கிறான். இன்னும் ஒரு புறமிருக்க உலகில் அவன் அசிங்கப்படவும், சிறையிலடைக்கப்படவும் காரணியாக ஆகிவிடும்.

أسئلة

الدرس : 5

பாடம் : 5

## عقوق الوالدين

## பெற்றோருக்கு நோவினை செய்தல்

قال رسول الله ﷺ : لا يدخل الجنة عاق

رواه البخاري

– ومعنى لا يدخل الجنة أي لا يدخلها مع الأولين

***அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் :***

***“பெற்றோருக்கு நோவினை செய்பவன் முதலாவதாக சுவனம் நுழைபவர்களுடன் சேர்ந்து சுவனம் நுழையமாட்டான்.”***

*(அறிவித்தவர் : இமாம் புஹாரீ)*

وعقوق الوالدين هو أن يؤذي الولد أبويه أو أحدهما أذى شديدا غير هين وذلك كأن يضرب والديه أو يسبهما أو يلعنهما أو أحدهما فهذا من المعاصي الكبيرة

பெற்றோருக்கு நோவினை செய்வதானது, ஒரு பிள்ளை தன் தாய் தந்தையை அல்லது அவ்விருவரில் ஒருவரை இலேசாக இல்லாமல் கடுமையாக நோவினை செய்வதாகும்.

அதாவது அவ்விருவரையும் அல்லது அவ்விருவரில் ஒருவரை அடித்தல் அல்லது ஏசுதல் அல்லது சபித்தல் போன்றவையாகும்.

இது பெரும்பாவங்களில் ஒன்றாகும்.

ومن عقوق الوالدين أن يعين الولد أباه على ظلم أمه أو يعين أمه على ظلم أبيه فهذا أيضا حرام من الكبائر الذنوب

தாயிற்கு அநியாயம் செய்வதற்கு தந்தைக்கு உதவி செய்வது அல்லது தந்தைக்கு அநியாயம் செய்வதற்கு தாயிற்கு உதவி செய்வது தடுக்கப்பட்ட பெரும்பாவங்களில் ஒன்றாகும்.

وعقوق الأم أشد معصية من عقوق الأب كما أن البر الأم أعظم ثوابا من بر الأب

தாயிற்கு உபகாரம் செய்வது தந்தைக்கு உபகாரம் செய்வதை விட நன்மை அதிகமானதாகும். அது போல் தாயிற்கு நோவினை செய்தல் தந்தைக்கு நோவினை செய்வதை விட கடுமையானதாகும்.

وإذا أطاع المسلم أباه أمه إذا أمراه بشئ ليس فيه معصية لله كان له ثوابا عند الله تعالى إن نوى نية حسنة

ஒரு முஸ்லிம் பாவம் அல்லாத விடயத்திலே நல்ல நிய்யத்துடன் தன் தாய், தந்தை ஏவிய ஒன்றுக்கு வழிப்பட்டு நடந்தால் அவருக்கு அழ்ழாஹ்விடத்தில் நன்மை உண்டு.

وقد ورد عن ابن عمر أنه رأى رجلا يحمل أمه على ظهره فقال له هذا الرجل لقد حججت بأمي وهي على ظهري أتراني وفيتها حقها يا ابن عمر فقال له عبد الله بن عمر ولا بطلقة أي ولا بطلقة واحدة من ءالام الوضع عندما ولدته

அப்துழ்ழாஹ் இப்னு உமர் ﵄ அவர்களின் வாயிலாக வந்துள்ளது

தன்னுடைய முதுகில் தன் தாயை சுமந்து கொண்டிருந்த ஒரு மனிதனை அவர்கள் கண்டார்கள். அந்த மனிதர் அவரிடத்திலே கூறினார்.

அப்துழ்ழாஹ் இப்னு உமரே!﵄

நான் என்னுடைய தாயை என்னுடைய முதுகில் சுமந்தவாறு ஹஜ் செய்ததால், நான் என்னுடைய தாயிற்குறிய கடமையை நிறைவேற்றி விட்டதாக நீங்கள் கருதுகிறீர்களா? என்று கேட்டார். அதற்கு அப்துழ்ழாஹ் இப்னு உமர் ﵄ அவர்கள் "உனது தாய் உன்னை பெற்றெடுக்கும் போது அடைந்த நோவினையின் சிறிதளவுக்கேனும் இது ஈடாகாது" என பதிலளித்தார்கள்.

فاحرص أن تكون مطيعا لوالديك في طاعة الله واجتنب تلك المعصية الذميمة معصية العقوق

அழ்ழாஹ் தஆலாவுக்கு வழிப்படும் விடயத்திலே தாய், தந்தைக்கு கட்டுப்படக் கூடியவனாக இருப்பதில் பேராசை கொள்ளுங்கள். மேலும் தாய் தந்தைக்கு நோவினை செய்தல் எனும் இகழப்பட்ட பாவத்தை விட்டும் தவிர்ந்து கொள்ளுங்கள்.

أسئلة

الدرس : 6

பாடம் : 6

صلة الرحم

உறவினர்களுடன் சேர்ந்து நடத்தல்

سأل أحد الصحابة رسول الله ﷺ قائلا يا رسول الله دلني على عمل إذا عملته دخلت الجنة فقال : أطعم الطعام وصل الأرحام وصل بالليل والناس نيام تدخل الجنة بسلام

رواه ابن حبان

அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்களிடத்தில் ஒரு ஸஹாபி "அழ்ழாஹ்வுடைய தூதரே! நான் எந்த அமலை செய்து வந்தால் அதன் மூலம் சுவனம் நுழைய முடியுமோ அத்தகைய ஒரு அமலை அறிவித்துதாருங்கள்." எனக் கேட்டபோது அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் சொன்னார்கள் : "உணவளியுங்கள், உறவினர்களுடன் சேர்ந்து நடந்து கொள்ளுங்கள், இரவில் மனிதர்கள் தூங்கிக் கொண்டிருக்கும் சமயத்தில் தொழுது கொள்ளுங்கள் ஈடேற்றமான முறையில் சுவனம் நுழைவீர்கள்."

(அறிவித்தவர் : இமாம் இப்னு ஹிப்பான்)

ففي هذا الحديث أن من أخذ بهذه الخصال دخل الجنة بدون عذاب وإحدى هذه الخصال : صلة الأرحام

மேற்கூறப்பட்ட இவ்விடயங்களை எவர் எடுத்து நடப்பாரோ அவர் எந்தவொரு வேதனையுமின்றி சுவனம் நுழைவார். என இந்த ஹதீஸின் மூலம் உணரப்படுகிறது.

உறவினர்களுடன் சேர்ந்து நடப்பது மேற்கூறப்பட்ட (ஹதிஸில் குறிப்படப்பட்ட) பண்புகளில் ஒன்றாகும்.

فالأرحام هم قربة الشخص إن كانو من جهة الأب أو من جهة الأم ومن قطع واحدا منهم استحق عذاب الله لحديث النبي ﷺ لا يدخل الجنة قاطع

رواه البخاري

والمعنى أن قاطع الرحم لا يدخل الجنة مع الأولين

உறவினர்கள் என்பவர்கள் தாய் தந்தையின் புறத்திலிருந்து வரக்கூடியவர்கள்.

அவர்களைத் துண்டித்து நடப்பவர்கள் தங்களை நரக வேதனைக்கு ஆளாக்கிக் கொள்கிறார்கள். ஏனெனில் அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் :

**“எவரொருவர் உறவுகளைத் துண்டித்து நடப்பாரோ அவர் முதலில் சுவனம் நுழைபவர்களுடன் சேர்ந்து சுவனம் நுழையமாட்டார்.”**

*(அறிவித்தவர் : இமாம் புஹாரீ)*

இதன் கருத்தாவது :- நிச்சயமாக உறவுகளைத் துண்டித்து நடப்பவன் முதலில் சுவனம் நுழையக் கூடியவர்களுடன் சுவனம் நுழையமாட்டான் என்பதாகும்.

ومعنى أن يصل الشخص رحمه أن يزور من استطاع من أقاربه ويراسل من لم يستطع زيارته والإحسان إلى المحتاج منهم ولا يجوز أن يقطع أرحامه فلا يزورهم في رمضان ولا في العيدين ولا عند المصائب ولا في الأفراح ولا في غيرها بل تمضي مدة يشعر القريب فيها الجفاء فمن فعل هذا يقال له : قاطع

உறவினர்களைச் சேர்ந்து நடப்பதென்றால்,

தனது உறவினர்களில் தனக்கு முடியுமானவர்களை சந்திப்பதாகும்.

உறவினர்களை சென்று சந்திப்பதற்கு இயலாதவர்கள், கடிதத் தொடர்புகளை மேற்கொள்வதாகும். மேலும் உறவினர்களில் தேவையுடையோராக இருப்போருக்கு உபகாரம் செய்வதாகும்.

உறவினர்களை துண்டித்து வாழக்கூடாது.

றமழான் மாதத்திலும், இரண்டு பெருநாளுடைய தினங்களிலும் சோதனைகளின் போதும், சந்தோஷங்களின் போதும், இது அல்லாத வேறு நிலைமைகளின் போதும் அவர்களைச் சந்திக்காமல் இருக்கக் கூடாது.

உறவினர்கள், தனிமையை உணர்கின்ற கால அளவு சென்றும் அவர்களைச் சந்திக்கமால் இருப்பவரை “உறவினரை துண்டித்து வாழ்பவர்” என்று சொல்லப்படும்.

إن زيارة الأقارب الذين لا يزورنك ليست مهانة ومذلة بل خصلة خير وعمل طاعة الله تعالى فاحرص على وزيارتهم وتقرب إليهم بالمودة واللطف واعمل على إعانتهم في فعل الخيرات

உன்னை சந்திக்காத உறவினர்களை சந்திக்கச் செல்வது இழிவான, கேவலமான ஒரு செயலல்ல. மாறாக அது நல்ல பண்பாகவும் அழ்ழாஹ்வை வழிப்படக்கூடிய அமலாகவும் காணப்படுகின்றது.

அவர்களைச் சென்று சந்திப்பதிலும் பேராவல் கொள்ளுங்கள். இன்னும் அவர்களுடன் மென்மையாகவும், அன்பாகவும் நெருங்கிப் பழகுங்கள். மேலும் நல்ல விடயங்களை செய்வதில் அவர்களுக்கு உதவியாக இருங்கள்.

أسئلة

الدرس : 7

الدرس : 7

பாடம் : 7

## التحاب في الله

## அழ்ழாஹ்வுடைய விடயத்திலே ஒருவரை ஒருவர் நேசம் கொள்ளுதல்

قال رسول الله ﷺ : قال الله تعالى : المتحابون بجلالي لهم منابر من نور يوم القيامة

அழ்ழாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் : எவ்விதத்திலும் தனது படைப்புக்களுக்கு ஒப்பாகாத, தூய்மையான அழ்ழாஹ் கூறியுள்ளான் : ‘‘உலகத்திலே அழ்ழாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பெறுவதற்காக ஒருவருக்கொருவர் அன்பாக நடந்து கொள்பவர்களுக்கு கியாமத் நாளில் பிரகாசத்தினாலான மேடைகள் வழங்கப்படும்.’’

ورد في الحديث الصحيح : سبعة يظلهم الله يوم القيامة في ظل العرش يوم لا ظل إلا ظله

وذكر في السبعة رجلان تحابا في الله

அர்ஷுடைய நிழலைத்தவிர வேறு எந்த நிழலுமில்லாத அந்த மறுமை நாளில் அர்ஷுடைய நிழலின் கீழ் நிழல் பெறும் கூட்டத்தினர் ஏழு என ஸஹீஹான ஹதிஸில் வந்தள்ளது.

அந்த ஏழு கூட்டத்தினர்களில் அழ்ழாஹ்வுக்காக நேசம் கொண்ட இருவரும் இருப்பார்கள். என கூறப்பட்டுள்ளது.

التحاب في الله هو أن يحب المسلم لأخيه المسلم ما يحب لنفسه من الخير فلا يغشه لا بالفعل ولا بالقول وإن رءاه على خير يفرح وإن رءاه على شر لا يزين له هذا الشر ولا يسكت عنه ما دام يستطيع أن يخلصه من هذا الشر بل ينصحه حتى يصلح ما فسد من حاله

அழ்ழாஹ்வுடைய விடயத்திலே ஒருவரையொருவர் நேசம் கொள்வதென்பது :

ஒரு முஸ்லிம், தனக்கு விரும்பக்கூடிய நலவுகளை மற்ற முஸ்லிமுக்கும் விரும்புவதாகும்.

வார்த்தை மற்றும் செயல் மூலமாக அவரை ஏமாற்றாமலிருப்பதுமாகும், மேலும் அவர் அவரிடத்தில் ஒரு நலவைக்கண்டால் சந்தோஷப்படுவதுமாகும்.

அவரிடம் ஒரு கெடுதியைக் கண்டால் அந்தக் கெடுதி அவருக்கு அழகுபடுத்திக்காட்டமாட்டர்.

அந்தக் கெடுதியிலிருந்து அவரை விடுவிக்க முடியும் பட்சத்தில் வாய் மூடி மௌனமாக இருக்கமாட்டார்.

மாறாக அவருடைய சீர் கெட்ட நிலமையை சீர் செய்யும் வரை அவருக்கு உபதேசம் செய்து கொண்டே இருப்பார்.

فإن رءاه مثلا تارك صلاة أرشده إلى فعلها وحذره من مخاطر تركها وإن رأى فيه حصلة قبيحة نصحه وأعانه على التخلص منها وإن رءاه جاهلا بعلم الدين دله أو أرشده إلى من يعلمه العلم الصحيح

உதாரணம் : ஒருவர், ஒரு முஸ்லிம் தொழுகையை விடக்கூடியவராக கண்டால் அவருக்கு தொழுமாறு நல்லுபதேசங்கள் புறிவார்.

தொழுகையை விடுவதன் மூலமாக ஏற்படும் விபரீதங்களைப் பற்றி அவருக்கு எச்சரிக்கை செய்வார்.

அவரிடம் ஒரு மோசமான பண்பைக் கண்டால் அவருக்கு உபதேசமும், அதை விடுவதற்கு உதவியும் செய்வார்.

மார்க்க அறிவைப்பற்றி தெளிவு இல்லாதவராக அவரைக் கண்டால், அவருக்கு தூய்மையான, சரியான அறிவை கற்றுக் கொடுப்பார் அல்லது கற்றுக் கொடுக்கும் ஒருவரை ஏற்படுத்திக் கொடுப்பார்.

والمتحابون في الله كما أخبرنا الرسول عليه الصلاة والسلام يكونون قبل دخولهم الجنة على منابر من نور تحت ظل العرش فيعجب بهم الناس حتى الأنبياء والشهداء مع أن الأنبياء أعلى منهم درجة لكن لما يرون هذا لمن هو دونهم يعجبون ويفرحون لهم بذلك بينما الكفار يتأذون من حر الشمس

அல்லாஹ்வுடைய விடயத்திலே ஒருவரை ஒருவர் நேசித்தவர்கள், அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் எங்களுக்கு அறிவித்துத் தந்ததைப் போன்று சுவனம் நுழைவதற்கு முன்னால் அர்ஷுடைய நிழலின் கீழ் பிரகாசத்திலான மேடைகள் மீது இருப்பார்கள்.

நபிமார்களும், ஷஹீதுகளும், ஏனைய மனிதர்களும் இவர்களைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள். இவர்களை விட உயர் அந்தஸ்து பெற்ற நபிமார்கள் கூட இவர்கள் பெற்ற இந்த பாக்கியத்தைக் கண்டு ஆச்சரியமடைவதுடன் மகிழ்வுமடைவார்கள். இவ்வாறான சந்தர்ப்பத்தில் காபிர்களுமோ சூரிய வெப்பத்தின் வேதனை சுவைத்துக் கொண்டிருப்பார்கள்.

هؤلاء هم المتحابون في الله يجتمعون على البر والتقوى ولا يجتمعون على الإثم والشر تجمعهم طاعة الله بعيدا عن الأغراض الدنيوية لا يغش بعضهم بعضا ولا يخون بعضهم بعضا ولا يدل بعضهم بعضا إلى شر أو ضلال أو ظلم بل يتحابون ابتغاء مرضاة الله تعالى فاحرص على أن تكون واحدا منهم

அல்லாஹ்வுடைய விடயத்திலே ஒருவரை ஒருவர் நேசிக்கக்கூடியவர்கள் உபகாரம் செய்தல் மற்றும் தக்வா போன்ற விடயங்களில் ஒன்றுபடுவார்கள். பாவங்களிலும், தீய விடயங்களிலும் ஒன்றுபடமாட்டார்கள்.

இவ்வுலக ஆசைகளை, நோக்கங்களை விட்டும் தூரமாக இருக்கும் நிலையில் அல்லாஹ்வுடைய வழிபாடு அவர்களை ஒன்று சேர்க்கும்.

அவர்களில் சிலர் சிலரை மோசடி செய்யமாட்டார்கள்.

இன்னும் சிலர் சிலருக்கு நம்பிக்கை துரோகம் செய்யவும் மாட்டார்கள். மேலும் கெடுதி, வழிகேடு, அநியாயம் இது போன்ற எதையும் செய்ய வழிகாட்டிக்கொடுக்கவும் மாட்டார்கள். அல்லாஹ்வின் திருப் பொருத்தம் நாடியே தங்களுக்குள் நேசம் வைப்பார்கள். இவர்களில் ஒருவனாக நீயும் ஆக ஆசைகொள்.

أسئلة